08.01.2025 - புதன்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

விலை ரூபா 40

ஆண்டு: 01 இதழ் : 65 குரோதி வருடம் மார்கழி மாதம் 24 ஆம் திகதி - ஹிஜ்ரி 1446 ரஜப் 08 பக்கங்கள் - 12




## சர்வதேச நெருக்கடிக்குள் கொழும்பு

# தாய்வானை சீனாவின் மாநிலமாக ஏற்க இலங்கை தீர்மானம்

**(சுப்ரமணியம் நிஷாந்தன்)**



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன விஜயத்தை முன்னிட்டு, இலங்கை ஒரே சீனா கொள்கையை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என வெளிவிவகார மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தத் தீர்மானத்தில் சட்ட ரீதியான சீனாவாக சீன மக்கள் குடியரசை மாத்திரமே ஏற்றுக் கொள்வதாகவும் தாய்வான் சீனாவின் ஒரு மாநிலம் என்பதை இலங்கை அதன் வெளிவிவகார கொள்கையில் கடைப்பிடிக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையின் அடிப்படையில் சீனாவுடனான உறவுகள் பேணப்படும் என்றும் 02 →

# இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்காது

## ஜனாதிபதி மீது முழுமையான நம்பிக்கை



## இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா

**( நமது நிருபர் )**

இலங்கை அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தயாராக இருக்கின்ற நிலையில் தேர்தலை நடத்துவதற்காக இந்தியா இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டிய அவசியம் இல்லையென இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஒருவன் பத்திரிகைக்கு தெரிவித்தார்.

அதேநேரம், இலங்கை தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் முழுமையான அரசியல் தீர்வு உருவாக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க

உறுதியளித்திருக்கிறார். அவர் அதனை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை இந்தியாவிற்கு முழுமையாக உள்ளது என்றும் அவர் கூறினார். 02 →

# சஜித் மீது அர்ச்சுனா காட்டம்

## நேரம் ஒதுக்குவது தொடர்பில் ஆராய விசேட குழு

**(சுப்ரமணியம் நிஷாந்தன்)**



நாடாளுமன்றில் தான் உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்குவதில் தமக்கு தொடர்ந்தும் சிக்கல்கள் இருப்பதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய அர்ச்சுனா எம்.பி,

“ஆளும் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களினது நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுவதற்கான நேரத்தை ஒதுக்க வேண்டிய 02 →



படம் - பு. கஜிந்தன்

சிவத்தமிழ்ச் செல்வி, அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழாவையொட்டி நேற்று (07) மல்லாகத்திலிருந்து அவரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்த்தி பவனிவந்தபோது... வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம அதிதி.

# ஈஸ்டர் தாக்குதல் புதிய கோணத்தில் விசாரணைகள்; 747 பேர் கைது

**(சுப்ரமணியம் நிஷாந்தன்)**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் பிரகாரம் இதுவரை 747 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். 02 →

# நேபாளம் மேற்கில் பாரிய நிலநடுக்கம்

## திபெத், நேபாளத்தில் 100 க்கு மேல் பலி

விபரம் 11 ஆம் பக்கம்

# ஜனாதிபதியினால் புதிய இராஜதந்திரிகள் ஐவர் நியமனம்

இலங்கை இராஜதந்திர சேவைகளை சேர்ந்த ஐவர், ஐந்து நாடுகளின் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று இந்த நியமனத்தை வழங்கி உள்ளார்.

இதன்படி, கட்டார் நாட்டின் தூதுவராக - ஆர்.எஸ்.கான் அசாத், ரஷ்ய தூதுவராக - திருமதி எஸ்.கே. குணசேகர, குவைத் தூதுவராக-எல்.பி.ரத்நாயக்க, எகிப்திய தூதுவராக-ஏ.எஸ்.கே.செனவிரத்ன, நியூசிலாந்து உயர்ஸ்தானிகராக-டபிள்யு.ஜீ.எஸ். பிரசன்ன 02 →

# அரச ஊடகங்கள் சீன ஊடகக் குழுமத்துடன் ஒப்பந்தம்



**(கனூஷியா புஷ்பகுமார்)**

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் லேக் ஹவுஸ் ஆகியவை சீன ஊடகக் குழுமத்துடன் ஒப்பந்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார். அதன்படி, சுகாதாரம் மற்றும் 02 →

# சர்வதேசத்தில் இலங்கையின் பிம்பத்தை உயர்த்துங்கள்

## புதிய இராஜதந்திரிகளுக்கு ஜனாதிபதி அறிவுரை



சர்வதேச சமூகத்தின் முன் இலங்கையின் பிம்பத்தை உயர்த்துவது தூதுவர்களின் பொறுப்பு என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார். கடந்த காலங்களில் இராஜதந்திர சேவைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இலங்கையின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய சந்தர்ப்பங்கள் இருந்ததாகவும், புதிய நியமனங்களை பெற்ற இராஜதந்திரிகளிடம் இருந்து அவ்வாறானவற்றை எதிர்பார்க்கவில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கான புதிய இராஜதந்திரிகளை நியமிக்கும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று(07) இடம்பெற்றது. 02 →

# கண் சத்திரசிகிச்சையில் பார்வையிழந்தோருக்கு இழப்பீடு

**(எஸ். டொரின்)**



கண்புரை சத்திரசிகிச்சை காரணமாக பார்வையிழந்த நோயாளர்களுக்கு இழப்பீடு வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மேலும், குறித்த மருந்து இறக்குமதிக்கு காரணமான அனைத்து தரப்பினருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக நேற்று (07) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் தெரிவித்தார்.

நுவரெலியா பொது வைத்தியசாலையில் கண்புரை சத்திரசிகிச்சைக்கு 02 →

# ரோஹிங்கியர்கள் தொடர்பில் ரிஷாட் எம்.பி ஜனாதிபதிக்கு கடிதம்!



கடந்த டிசம்பர் மாதம் இலங்கையில் தஞ்சமடைந்த மியன்மார் நாட்டின் ரோஹிங்கிய அகதிகள் தொடர்பில், சர்வதேச சட்டத்துக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது 02 →

# நாட்டு அரிசிகளுக்கு சந்தையில் கடும் தட்டுப்பாடு!

**(கனூஷியா புஷ்பகுமார்)**



நாடளாவிய ரீதியில் சந்தைகளில் உள்நாட்டு சிவப்பு அரிசி, வெள்ளை பச்சையரிசி மற்றும் நாட்டு அரிசி ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு கடுமையாக அதிகரித்துள்ளது.

நுகர்வோர் கட்டுப்பாட்டு விலைக்கு பச்சையரிசியை பெற்றுக் கொள்வதில் கடும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

அனைத்து பல்பொருள் அங்காடிகள் மற்றும் சில்லறை கடைகளில் பச்சையரிசி தொட்டிகள் காலியாகக் கிடப்பதை அவதானிக்க முடிகிறது.

ஒரு சில கடைகளில் பச்சையரிசி காணப்பட்ட போதிலும், அந்த அரிசியை கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு சூழல் உருவாகியுள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

ஒரு கிலோ உள்ளூர் பச்சையரிசியின் 02 →

# ‘அரசாங்கம் மக்களுக்கு பொய்களை கூறி ஏமாற்றியுள்ளது’

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

தேர்தல் காலத்தில் அரசாங்கம் கூறிய விடயங்களுக்கும் அவர்கள் நடைமுறைப்படுத்தும் தீர்மானங்களுக்கும் இடையில் பாரிய இடைவெளிகள் இருப்பதாக எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வருட ஆரம்பத்தின் நிதி நிலைமை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

“சிவப்பு அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை 220 ரூபாவாகவும் நாட்டு அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை 230 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ள சூழலில் 265 ரூபாவிற்கு சிவப்பு அரிசி விற்கப்படுவதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த அரசாங்கம் அமையப்பெற்று மூன்று மாதங்கள் கடந்துள்ளன. இப்போது அரிசி இல்லை எனக் கூற முடியாது. சிவப்பு அரிசியை இறக்குமதி செய்திருக்கலாம். ஆனால்,அரசாங்கம் செய்யவில்லை. தற்போது நாட்டில் அரிசிக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நெல்லுக்கான கொள்வனவு விலையாக 110 ரூபாவை நிர்ணயிக்க உள்ளதாக தெரியவருகிறது. தேர்தல் காலத்தில் அரசாங்கம் கூறியதற்கும் தற்போது அவர்கள் நாடாளுமன்றில் முன்வைக்கும் விடயங்களுக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் உள்ளன. செய்ய முடியாதவற்றை தெரிவித்து மக்களுக்கு பொய்களை கூறியே இவர்கள் ஏமாற்றியுள்ளனர்.” என்றார்

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### இந்தியா இலங்கைக்கு...

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் அச்சு, இலத்திரனியல் ஊடகங்களின் ஆசிரியர்களை நேற்று பிற்பகல் சந்தித்த உயர்ஸ்தானிகர், இலங்கை- இந்திய இருதரப்பு உறவுகள் தொடர்பாக கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

இதன் பின்பு, ஒருவன் பத்திரிகை எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே உயர்தனிகர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"இந்தியா அழுத்தம் கொடுக்கும் நாடல்ல. அண்டை நாடு என்றவகையில், நேசக்கரம் நீட்டி, இலங்கையின் அபிவிருத்தியில் பங்காளர்களாக இருக்கின்றோம்." என்று கூறிய அவர், இலங்கையின் அபிவிருத்தியில் இந்திய அரசு, தொடர்ந்தும் பங்களிப்பு வழங்கும் என்றார்.

ஊடகங்களின் ஆசிரியர்களுடன் பேசி அவர், இரு நாடுகளுக்கும் இடையில் இருக்கின்ற இருதரப்பு நெருக்கமான உறவுகள் தொடர்பில், விரிவாக எடுத்துக் கூறினார்.

2024 ஆம் ஆண்டு இரு நாடுகளின் உறவில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டதாக சுட்டிக்காட்டிய அவர், அண்டைய நாடு என்ற வகையிலும் நீண்ட கால நட்பு நாடு என்ற வகையிலும் இந்தியா இலங்கைக்கு பொருளாதார ஒத்துழைப்புகளை வழங்கி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

வடக்கு,கிழக்கு,தெற்கு மற்றும் மலையகம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் இந்தியா முழுமையான அபிவிருத்தி திட்டங்களை பூரண திருப்தியோடு முன்னெடுக்கிறது.

கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், மலையகத்தில் மேற்கொள்ளப்படும்

வீடமைப்புத் திட்டங்கள், தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை கண்காணிப்பதற்காக, இலங்கையும் இந்தியாவும் விசேட பிரதிநிதிகளை நியமித்திருக்கின்றன. நிதி ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப, மலையக வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்று கூறினார்.

எட்கா ஒப்பந்தம் தொடர்பாக கருத்து தெரிவித்த அவர், "தொடர்ந்து இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. கலந்துரையாடல் மட்டத்திலேயே அந்த விடயங்கள் இருக்கின்றன. அதற்காக அரசாங்கம் அதனை நிராகரித்து விட்டது என்று கூற முடியாது. இரு நாடுகளும் எட்கா ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தையிலேயே இருக்கின்றன.. என தெரிவித்தார்.

திருகோணமலையிலும், எண்ணெய் குதம் தொடர்பான வேலைத்திட்டங்களை இந்தியா முன்னெடுத்து வருகின்றது. சம்பூரில், மின் சக்தி திட்டங்கள், முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம், வெற்றிகரமாக அமைந்துள்ளது என்று தெரிவித்த இந்திய உயர்த்தானிகர், அவருடைய விஜயத்தினால், இரு நாட்டு உறவுகளும் மேலும் பலமடைந்துள்ளதாக தெரிவித்தார்.

### அரச ஊடகங்கள் ....

வெகுஜன ஊடக அமைச்சு மற்றும் சீன மக்கள் குடியரசு நிறுவனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த தீர்மானத்தில், இரு நாடுகளுக்கிடையில் காணப்படுகின்ற ஒத்துழைப்புகளை பலப்படுத்தும் நோக்கில் சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு மற்றும் சீன மக்கள் குடியரசின் கீழ்காணும் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளது.

சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு மற்றும் சீன மக்கள் குடியரசின் தேசிய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் வரையறுக்கப்பட்ட ஐக்கிய பத்திரிகைக் கம்பனி மற்றும் சீனாவின் சிங்குவா பத்திரிகை முகவர் நிறுவனத்திற்கும் (Xinhua News Agency) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் சீனாவின் சிங்குவா பத்திரிகை முகவர் நிறுவனத்திற்கும் (Xinhua News Agency) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சீனா ஊடகக் குழுமம் (China Media Group) இதற்கிடையிலான ஒப்பந்தம்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் சீனா ஊடகக் குழுமம் (China Media Group) இதற்கிடையிலான ஒப்பந்தம் ஆகிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

இதேவேளை, சீன ஊடகக் குழுமம் (China Media Group) மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சீன சந்தையில் கோழி இறைச்சி ஏற்றுமதி தொடர்பான நடவடிக்கை முறைகள் (Protocol) இற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும், இலங்கைக்கான அவசர மனிதாபிமான உதவி வழங்கல் தொடர்பான கருத்திட்டத்திற்கு (அரிசி, மீன்பிடி வலைகள் மற்றும் பொருத்து வீடுகள்) உள்ளிட்ட இலங்கை மற்றும் சீனாவுக்கும் இடையில் ஒப்படைக்கும் சான்றில் கையொப்பமிடம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது

### சர்வதேசத்தில் ...

இங்கு உரையாற்றுகையிலே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தி செயற்படுமாறும் அந்த நாடுகளில் உள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் சேவைகளை வழங்குவதற்கு முன்னின்று பாரபட்சமின்றி நியாயமாக செயற்படுமாறும் ஜனாதிபதி புதிய இராஜதந்திரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இலங்கைப் பணியாளர்கள் தொழில்புரியும் மத்திய கிழக்கு, தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் இராஜதந்திர சேவைகளை வழங்குவதில் அதிக கவனம் செலுத்துவது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதுடன் இலங்கையில் முதலீட்டாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் பணியை இராஜதந்திர சேவையின் ஊடாக மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கொண்டு வருவது தூதுவருக்கு வழங்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பு எனவும், அதற்கு தேவையான ஆதரவை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 04 தூதுவர்களையும் உயர்ஸ்தானிகர் ஒருவரையும் நியமித்தார். இராஜதந்திர சேவையில் 20 வருடங்களுக்கு மேலாக அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் இவ்வாறு இராஜதந்திர சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்

### ஈஸ்டர் தாக்குதல்...

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் தேசிய மக்கள் சக்தியின் எம்.பி.அஜித் கிஹான் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் ஆனந்த விஜேபால இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

கைதுசெய்யப்பட்ட 747 சந்தேகநபர்களில் 100 சந்தேகநபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் 14 வழக்குகள் தொடரப்பட்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் செனல் 4 தொலைக்காட்சியில் வெளியிட்ட விவரங்கள் மற்றும் மேலதிக விவரங்களின் பிரகாரம் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இவற்றில் வெளிப்படும் தகவல்களின் பிரகாரம் தொடர்ச்சியான விசாரணைகள் இடம்பெறும்.

புதிய அரசாங்கத்தின் கீழ் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளும் புதிய கோணத்தில் ஆரம்பமாகியுள்ளன. கடந்த நவம்பர் மாதம் 11ஆம் திகதி விசாரணைகள் தொடர்பிலான தகவல்களை நீதிமன்றில் சமர்ப்பித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம்.

12 சிவில் சாட்சியாளர்கள், 7 இராணுவ உறுப்பினர்கள், 26 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் 3 பேர் அடங்கலாக 48 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. உரிய விதிமுறையின் கீழ் விசாரணைகள் இடம்பெறுகின்றன." என்றார்

### தாய்வானை சீனாவின்...

அந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தாய்வான் முழுமையாக சீனாவுக்குச் சொந்தமான பகுதியென சீனா தொடர்ந்து கூறிவருவதுடன், அவ்வப்போது தாய்வானுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் விவகாரங்களிலும் சீனா ஈடுபட்டு வருகிறது. இதற்கு அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிடுவதுடன், தாய்வான் சுதந்திரமான நாடு என வாதாடி வருகின்றன. சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு தாய்வான் தொடர்ந்து கடுமையான எதிர்ப்புகளை வெளியிட்டும் வருகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன பயணத்துக்கு முன்னர் இத்தகையதோர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை பல்வேறு சர்ச்சைகளுக்கு வழிவகுக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுவதுடன், இது இலங்கைக்கு இராஜதந்திர நெருக்கடிகள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் கூறுகின்றனர்.

இலங்கையின் கடந்த அரசாங்கங்களும் இந்த விவகாரம் தொடர்பில் வெளிப்படையான பதில்களை அளிக்காது செயல்பட்டிருந்தன. கடந்த அரசாங்கங்கள் போல் அதேகொள்கையை சமகால அரசாங்கமும் கடைபிடித்தாலும் ஜனாதிபதியின் சீன பயணத்துக்கு முன்னர் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமையால் பல்வேறு நெருக்கடிகள் அரசாங்கத்துக்கு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த தீர்மானம் சீனாவுக்கு சார்பான கொள்கையை வெளிப்படுத்தும் வகையில் உள்ளதாகவும், சீனாவிடமிருந்து அதிக உதவிகளை பெறுவதை இலக்காக கொண்டு அரசாங்கத்தின் நகர்வுகள் இருப்பதாகவும் கூறும் அரசியல் ஆய்வாளர்கள், இத்தகைய கொள்கை முடிவு மேற்குலக நாடுகளின் எதிர்ப்புகளுக்கும் அழுத்தங்களுக்கும் இலங்கை உள்ளாகும் சூழலை உருவாக்கலாம்.

அணிசேராக் கொள்கையின் பிரகாரம் இலங்கை செயல்பட வேண்டுமென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க , கடந்த காலங்களில் கூறியிருந்தார்.

என்றாலும், தாய்வான் தம்மை சுயாதீன நாடாக கூறிவரும் சூழலில் தாய்வானை சீனாவின் மாநிலமாக ஏற்றுக்கொள்வதாக இலங்கையின் முடிவு சர்வதேச ரீதியில் பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கும். இது அரசாங்கத்தின் எதிர்கால செயல்பாடுகளுக்கு ஆபத்தான விடயமாகவும் மாறக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### சஜித் மீது...

பொறுப்புஎதிர்க்கட்சித்தலைவர் சஜித்பிரேமதாசவிடம் உள்ளது. அதற்கான நடவடிக்கையை சஜித் பிரேமதாச எடுக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்தது மேலே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு வீடு செல்வதற்கு இல்லை. தனக்கு உரையாற்றச் சந்தர்ப்பம் வழங்கப்படாமையால் நாடாளுமன்றம் வந்தும் பயனற்ற நிலைமை உள்ளது." என்றார்.

இதன்போது, குறுக்கிட்ட எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் கயந்த கருணாதிலக்க, இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் உள்ளிட்டோருடன் கலந்துரையாடி இருப்பதாகவும், இந்த விடயத்தில் சபாநாயகரின் அறிவுறுத்தலுக்காகக் காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவுறுத்தலை சபாநாயகர் வழங்கியபோதும், அதற்கான நடவடிக்கையை சஜித் பிரேமதாச எடுக்கவில்லை எனவும் அர்ச்சுனா எம்.பி குற்றம் சுமத்தினார்.

இதற்கு பதில் அளித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரட்ன, "எதிர்க்கட்சி பிரதம கொறடாவுக்கு தொடர்பில் உரிய கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளோம். அர்ச்சுனா எம்.பியின் விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து தீர்வு வழங்க விசேட குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது." என்றார்.

### ரோஹிங்கியர்கள்..

இலங்கையில் புகலிடம் கோரி வரும் ரோஹிங்கியா அகதிகளை திருப்பி அனுப்பும் தீர்மானம் குறித்து மிகுந்த கவலையுடன் உங்களுக்கு அறியத் தருகின்றேன். தங்கள் நாட்டில் துன்புறுத்தலுக்கு ஆளாகியிருக்கும் இந்த மக்களின் நல்வாழ்வைக் கருத்திற்கொண்டு, சர்வதேச மனிதாபிமான கொள்கைகளை நாம் கடைபிடிக்க வேண்டும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

மியன்மாரில் நிலவும் கடுமையான வன்முறை மற்றும் அடக்குமுறை காரணமாக, ரோஹிங்கியா மக்கள் நம் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் இலங்கைக்கு வந்திருப்பது, உண்மையாகவே உயிர் அச்சுறுத்தலுக்காகவே அன்றி, பொருளாதார புலம்பெயர்ந்தோராக அல்ல. ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகம் இந்த நபர்களின் அவலநிலையை அங்கீகரிக்கிறது. மேலும் மனித உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மதிக்கும் ஒரு நாடாக, அவர்கள் பாதிக்கப்படக்கூடிய நேரத்தில், அவர்களுக்கான பாதுகாப்பை வழங்குவது நம்மீது கடமையாகும்.

அகதிகள் மீதான சர்வதேச சட்டங்கள் மற்றும் மரபுகளுடன் எங்கள் நடவடிக்கைகள் ஒத்துப்போவதை உறுதி செய்ய வேண்டும், principle of non-refoulement – தனிநபர்கள் தங்கள் உயிருக்கு அல்லது சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் இடங்களுக்கு திருப்பி அனுப்புவதைத் தடை செய்தல், இந்தக் கோட்பாட்டை நிலைநிறுத்துவதன் மூலம், பாதிக்கப்படக்கூடிய நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமன்றி, சர்வதேச மனிதாபிமான தரங்களுக்கு இலங்கையின் அர்ப்பணிப்பை நிரூபிக்கவும் இது உதவும்.

வரலாற்று ரீதியாக, இலங்கை துன்புறுத்தலுக்கு ஆளாகியவர்களுக்கு புகலிடமளிக்கும் ஒரு நாடாக இருந்து வருகிறது. பல இலங்கையர்கள் யுத்த காலங்களில் வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்துள்ளனர். ரோஹிங்கியா அகதிகளின் தற்போதைய நிலைமை, கடந்த காலத்தில் ஒரு தேசமாக நாம் எதிர்கொண்ட போராட்டங்களை பிரதிபலிக்கிறது என்பதை நினைவில்கொள்வது மிகவும் முக்கியமானது. மியன்மாரில் இந்த மக்களின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் இன்னும் ஆபத்தில் உள்ள நிலையில், அவர்களை வலுக்கட்டாயமாக மியான்மருக்கு திருப்பி அனுப்பும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த அகதிகள் இலங்கையில் தங்கியிருக்கும் வரை, அவர்களை மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்த வேண்டும் எனவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் கைதிகளாகக் கருதப்படாமல், நமது அன்பும் ஆதரவும் தேவைப்படும் மக்களாகக் கருதப்பட வேண்டும்.

இந்த அகதிகள் தங்களுக்கு மீள்குடியேறக்கூடிய பொருத்தமான, பாதுகாப்பானதாகக் கருதப்படும் மூன்றாவது நாட்டை அடையாளம் காண்பதற்கு, ஐக்கிய நாடுகள் சபையுடன் ஒத்துழைப்பது பொருத்தமானதாக இருக்கும் என்றார்.

### நாட்டு அரிசிகளுக்கு ...

கட்டுப்பாட்டு விலை 220 ரூபாய் என்ற போதிலும் கடைகளில் 240 ரூபாய் தொடக்கம் 300 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, தற்போது எந்தவொரு நிலையிலும் அரிசியை கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு சூழல் எழுந்துள்ளது.

சில தினங்களுக்கு முன் பல்பொருள் அங்காடிகளில் பச்சையரிசி தொட்டிகளில் 220 ரூபாய் என விலை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தற்போது அது 240 ரூபாய் என குறிப்பிடப்பட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

அரிசி விலை தொடர்பில் அரசாங்கம் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் தற்போது அரிசி நெருக்கடியை தீர்க்க முடியாத வெறும் காகிதமாக மாறியுள்ளதாக தேசிய விவசாய சங்கத்தின் தலைவர் அனுராத தென்னகோன் தெரிவித்தார்.

மொத்த விற்பனையாளர்களுக்கு விதிக்கப்பட்ட நடைமுறைப்படுத்தப்படாத அரிசி வர்த்தமானி அறிவித்தலின் மூலம், சில்லறை விற்பனையாளர்கள் தற்போது உள்ளூர் பச்சையரிசி மற்றும் நாட்டு அரிசி விற்பனையில் இருந்து விலகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பச்சை மற்றும் நாட்டு அரிசிக்கு தேவையான கையிருப்பு, ஆலை உரிமையாளர்களிடம் இன்னும் காணப்படுவதாகவும் நுகர்வோர் அதிகார சபைக்கு குறித்த நெல் கையிருப்பை கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளதாகவும் அரசாங்கம் மற்றும் நுகர்வோர் அதிகார சபை கூறுவது பொய் எனவும் அவர் கூறினார்.

நுகர்வோரை தவறாக வழிநடத்தி அரிசி வர்த்தகர்கள் தேவையற்ற இலாபம் ஈட்ட அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அரிசி நெருக்கடியை தீர்ப்பதில் அரசாங்கமும் நுகர்வோர் அதிகார சபையும் முறையாக ஈடுபடவில்லை எனவும் தேசிய விவசாயிகள் சங்கத்தின் தலைவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

### கண் சத்திரசிகிச்சையில்...

உட்படுத்தப்பட்ட பல நோயாளர்களின் பார்வையற்றதன்மை தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றதையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக நளிந்த ஜயதிஸ்ஸ இங்கு குறிப்பிட்டார்.

இதனடிப்படையில், கண்புரை சத்திரசிகிச்சையால் பாதிக்கப்பட்ட 17 நோயாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு நேற்று முன்தினம் அமைச்சரவை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நுவரெலியா பொது வைத்தியசாலையில் கண்புரை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பல நோயாளர்களின் கண்கள் பார்வையற்று போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலர் முற்றிலும் பார்வையற்றவர்களாக மாறினர். இவர்கள் தொடர்பில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழுவின் அறிக்கை பெறப்பட்டது.

இதுபோன்ற இழப்பீடு வழங்குவது இதற்கு முன் நடந்ததில்லை. எனவே, நாங்கள் இப்போது இழப்பீட்டு முறையைத் தயாரித்து வருகிறோம். அது மாத்திரமன்றி, இந்த மருந்தை இறக்குமதி செய்வதற்கு காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. எனவே, இது குறித்து ஒவ்வொன்றாக விசாரிக்கப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நாங்கள் பரிந்துரைக்கிறோம்" எனவும் அவர் குறிப்பிட்டார்

### ஜனாதிபதியினால்...

ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரொஷான் கமகே ஆகியோரும் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

# தென்கொரியாவில் சட்டவிரோதமாகவுள்ள இலங்கையர்களை அழைக்க நடவடிக்கை

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவிப்பு

தென்கொரியாவில் குறிப்பிட்ட வீசா காலம் நிறைவடைந்த பின்னரும் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கை தொழிலாளர்களை, நாட்டுக்கு அழைத்துவருவதற்கு தேவையான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க தெரிவித்தார். தென்கொரியாவில் வேலைவாய்ப்பு பெற்றுச் செல்லும் 96 இலங்கையர்களுக்கான விமானச் சீட்டு வழங்கும் நிகழ்வு நேற்று (07) பணியகத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வாறு சட்டவிரோதமாக தங்கியுள்ள நபர்களின் தகவல்கள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டு தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். தொழிலுக்காக செல்பவர்களின் நடத்தைகள் அடிப்படையில் இந்நாட்டிற்கு கிடைக்கும் வேலைவாய்ப்புகளின் ஒதுக்கீடு தீர்மானிக்கப்படும் என்பதால், நிர்ணயிக்கப்பட்ட விசா காலம் முடிவடைந்தால், சட்டவிரோதமாக தென் கொரியாவில் தங்க வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொண்டார். 2025ஆம் ஆண்டில் ஏறக்குறைய 8,000 இலங்கையர்களுக்கு தென் கொரிய தொழில் வாய்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர், தென்கொரியாவிற்கு தொழிலாளர்களை சேர்த்துக்கொள்ளும் 16 நாடுகளில் இலங்கையில் இருந்து உயர் திறன் கொண்ட தரமான தொழிலாளர்களை அனுப்ப தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

புலம்பெயர் தொழிலாளர்கள் இலங்கைக்கு வருடாந்தம் 6,000 மில்லியன் அமெரிக்க டொலர்களை அனுப்புவதாகவும், நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு இத்தொகை பெரும் பங்களிப்பை செய்து வருவதாகவும், அதற்காக அரசாங்கம் அவர்களுக்கு நன்றி செலுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 24ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்:** இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும்.

**ரிஷபம்:** இன்று உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் வேண்டும்.

**மிதுனம்:** இன்று ஆதாயம் கிடைக்கும் நாள்.

**கடகம்:** இன்று உங்கள் காரியங்களை எளிதாக செய்வீர்கள்.

**சிம்மம்:** உங்கள் வளர்ச்சிக்கு இடையே உள்ள இடைவெளிகளை நீக்கி வளர்ச்சி பெறுவீர்கள்.

**கன்னி:** இன்று உங்களுக்கு நல்ல நாள். ஆனால் சில தடைகளை நீங்கள் சந்திக்க நேரலாம்.

**துலாம்:** இன்று செயல்களை திட்டமிட்டு செய்வதன் மூலம் நற்பலன்களைக் காணலாம்.

**விருச்சிகம்:** முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்று சிறந்த நாள்.

**தனுசு:** முன்னேற்றத்தை அடைவதற்காக நீங்கள் பல யோசனைகளைக் கொண்டிருப்பீர்கள்.

**மகரம்:** உறவில் அன்பு குறைந்து காணப்படும்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**மீனம்:** இன்று பணியில் பதட்டமான தருணங்கள் காணப்படும். பொறுமையோடு இருங்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று பிற்பகல் 02:16 வரை நவமி பின்பு தசமி.

**நட்சத்திரம்:** இன்று மாலை 04:35 வரை அஸ்வினி பின்பு பரணி.

**யோகம்:** மரண,சித்த.

**சந்திராஷ்டமம்:** உத்திரம், அஸ்தம்.

**சூலம்:** வடக்கு.

**இராகு காலம்:** 12:00 PM முதல் 01:30 PM வரை.

**குளிகை:** 10:30 AM முதல் 12:00 PM வரை.

**எமகண்டம்:** 07:30 AM முதல் 09:00 AM வரை.

# ஒரு இலட்சம் மெட்றிக் தொன் அரிசி விடுவிப்பு!

(கனூஷியா புஷ்பகுமார்)

இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்ட தினத்திலிருந்து நேற்று (07) பிற்பகல் வரையில் 101,000 மெட்றிக் தொன் இறக்குமதி அரிசி துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

இதனை சுங்க ஊடகப் பேச்சாளர், மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சிவலி அருக்கொட நேற்று (7) பிற்பகல் உறுதிப்படுத்தினார். இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட 101,000 மெட்றிக் தொன் அரிசியில் 40,000 மெட்றிக் தொன் பச்சையரிசி மற்றும் 61,000 மெட்றிக் தொன் நாட்டு அரிசி உள்ளடங்குவதாக அவர் தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கி வரும் அரிசி நெருக்கடிக்கு தீர்வாக, இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி அரிசியை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பத்தை தனியார் துறையினருக்கு தற்போதைய அரசாங்கம் டிசம்பர் 4ஆம் திகதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் மு.கா சர்வதேச விவகாரப் பணிப்பாளர் சந்திப்பு

(எஸ். சினீஸ் கான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரப் பணிப்பாளரும், மெட்ரோபொலிடன் கல்லூரியின் தலைவருமான சிராஸ் மீராசாஹிப் மற்றும் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் அந்தலிப் எலியாஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (7) நடைபெற்றது. இச்சந்திப்பின்போது சமகால அரசியல், சமூக விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

# கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் நவீன வசதிகளுடன் 100 ரயில் நிலையங்கள்

(முகம்மட் முக்தார்)

நாடாளாவிய ரீதியில் உள்ள புகையிரத நிலையங்களை கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தின் கீழ் மகிழ்ச்சிகரமான ரயில் நிலையங்களாக மாற்றியமைக்க ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக கொழும்பு,கோட்டை ரயில் நிலையத்தில் இத்திட்டம் முதலில் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரயில் பயணிகளுக்கு நவீன இருக்கை வசதிகள், நவீன கழிவறை வசதிகள், குளிரூட்டப்பட்ட ஓய்வு அறை, ரயில்வே புட்சிட்டி, நவீன சிற்றுண்டிச்சாலை வசதிகள் என்பன பயணிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் எஸ்.இத்திப்பொல தெரிவித்தார். மாகாண அடிப்படையில் கிழக்கில் மட்டக்களப்பு, வடக்கில் யாழ்ப்பாணம், மத்தியில் கண்டி, ஊவாவில் பதுளை தென்மாகாணத்தில் காலி, மாத்தறை வட மத்திய மாகாணத்தில் அநுராதபுரம், பொலன்னறுவை வடமேல் மாகாணத்தில் குருநாகல், மாகோ ஆகிய ரயில் நிலையங்களும் மகிழ்ச்சிகரமான ரயில் நிலைய திட்டத்தினுள் உள்வாங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நாடளாவிய ரீதியில் 100 ரயில் நிலையங்கள் இவ்வாறு மகிழ்ச்சிகரமான ரயில் நிலையங்களாக மாற்றம் பெற உள்ளன.

# தொல்லியல் திணைக்கள பதாகையால் வெருகல் பகுதியில் பரபரப்பு!

(கிண்ணியா கியாஸ் ஷாபி)

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியின் வட்டவான பகுதியில் திங்கட்கிழமை (06) மாலை தொல்லியல் திணைக்களத்தினால் நடப்பட்ட பதாகையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

“1 KM வட்டவான் தொல்லியல் நிலையம்” என குறிப்பிட்டு குறித்த பதாகை நடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் இது பெரும் பரபரப்பையும், விசனத்தையும் ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் எவ்வளவு பகுதி தொல்லியலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது? அதற்காக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதா? எதிர்காலத்தில் அப்பகுதியில் புத்த விகாரை வருமா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தொல்லியல் திணைக்களத்தின் குறித்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த 28.12.2024 அன்று இரவோடு இரவாக குச்சவெளி பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினால் பதாகை நடப்பட்டதை எதிர்த்து கடந்த 01ஆம் திகதியன்று மக்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# துப்புரவு செய்யப்படும் நெல் களஞ்சியசாலைகள்

(கனூஷியா புஷ்பகுமார்)

அரசாங்கத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்துடன் இணைந்து பொதுமக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பல வருடங்களாக கைவிடப்பட்டிருந்த ஹிகுரக்கொட சதொச நெல் களஞ்சியசாலை வளாகத்தை புனரமைக்கும் பணியின் முதற்கட்டமாக, வளாகத்தை சுற்றி துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் நெல் கொள்வனவு திட்டத்திற்காக களஞ்சியசாலைகளை தயார்படுத்தும் நோக்கில் சதொசவின் புதிய தலைவர் கோசல வில்பாவவின் மேற்பார்வையின் கீழ், ஹிகுரக்கொட பிரதேச செயலகம், நெல் சந்தைப்படுத்தல் சபை, பொலிஸ், சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பிற அரசு நிறுவனங்கள், விவசாய அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், விவசாயிகள் மற்றும் உள்ளூர்வாசிகளின் பங்கேற்புடன் இந்த துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# விளக்கமறியலில் வைக்கப்பட்ட 12 மியன்மார் அகதிகள் உறவினர்களுடன் இணைப்பு!

(கிளிநொச்சி நிருபர்)



மியன்மாரில் இருந்து வந்த அகதிகள் படகில் ஆட்கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 12 மியன்மார் பிரஜைகளும் நேற்று (07) விடுதலையாகி கேப்பாபுலவு இடைத்தங்கல் முகாமிற்கு அழைத்து செல்லப்பட்டனர். முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்பரப்பில் கடந்த மாதம் 19 ஆம் திகதி 115 பயணிகளுடன் மியன்மார் அகதிகள் படகு கரை ஒதுங்கியிருந்தது. சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் பயணிகளை அழைத்துவந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு அவர்களில் 12 பேர் சட்டவிரோத படகு பயணத்திற்கு செயற்பட்டதாக கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில் குறித்த 12 பேரும் நேற்று விடுவிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமிற்கு அழைத்து செல்லப்பட்டனர்.

கேப்பாபுலவு விமானப் படைத்தளத்திற்கு கடந்த 23ம் திகதி மியன்மார் அகதிகள் 103 பேர் அழைத்து வரப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் நேற்று விடுதலையான 12 பேரும் இணைக்கப்பட்டனர். முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்பரப்பில் கடந்த 19 ஆம் திகதி 115 பயணிகளுடன் மியன்மார் அகதிகள் படகு கரை ஒதுங்கியிருந்தது. பின்னர் கப்பல் கரைக்கு வர முடியாத நிலையில் கடற்படையினரின் உதவியுடன் திருகோணமலை கடற்படை தளத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் அவர்கள் திருகோணமலை ஜமாலிய முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் தஞ்சம் கோரிய 115 மியன்மார் ரொஹிங்கிய அகதிகளும் மிரிஹானை இடைத்தங்கல் முகாமில் தங்கவைப்பதற்கான இடவசதி இல்லாத காரணத்தினால் இவர்களில் 103 பேர் மீண்டும் முல்லைத்தீவு கேப்பாபுலவு விமானப்படை தளம் ஒன்றில் தற்காலிகமாக தங்கவைக்க அழைத்து செல்லப்பட்டனர்.

# ஆசிரியர் ஆலோசகர்களுக்கு கல்வியமைச்சின் அறிவிப்பு

(முகம்மட் முக்தார்)

பாடசாலை விடுமுறை காலங்களில் இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை உத்தியோகத்தர்கள் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு கடமைகளுக்காக சமுகமளிப்பது கட்டாயமல்ல என கல்வி அமைச்சு மாகாண, வலயகல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கையினை கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் அமல் எதிரிசூரிய அனுப்பி வைத்துள்ளார்.

இச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை உத்தியோகத்தர்களின் முக்கியபணி கற்பித்தல் மேற்பார்வை ஆசிரியர்களுக்கு கற்றல், கற்பித்தல் கடமையில் தேவையான ஆலோசனை வழங்குவதுமாகும். அவர்கள் நிருவாகக் கடமையில் ஈடுபடுத்தப்படுபவர்கள் அல்ல. எனவே பாடசாலை தவணை விடுமுறைக் காலங்களில் பாடசாலைகளில் கற்பித்தல் மேற்பார்வை கடமையில் ஈடுபடுத்தலில் இவர்கள் ஈடுபட முடியாது. அத்துடன் நிர்வாகக் கடமைகளில் இவர்கள் ஈடுபடுத்தப்படுபவர்களும் அல்லர் என்பதனால் அலுவலகங்களில் தரித்திருக்க வேண்டிய அவசியமில்லை.

எனினும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கடமைக்காக அழைத்தால் சமுகமளிக்க வேண்டும் எனும் நிபந்தனை விதிக்கப்பட்டு பாடசாலைத் தவணைக்காலங்களில் அலுவலகங்களுக்கு சமுகமளிப்பது கட்டாயப்படுத்தப்படும் தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவதாகவும் கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஹட்டன் தனியார் பஸ் விபத்து சாரதிக்கு கடும் நிபந்தனையுடன் பிணை

(எஸ்.டொரின்)

ஹட்டன் தனியார் பஸ் விபத்தின் சாரதியை கடுமையான பிணை நிபந்தனைகளில் விடுவிக்குமாறும், இந்த வழக்கை எதிர்வரும் 05.06.2025 அன்று மீண்டும் விவாதத்துக்கு எடுக்குமாறும் ஹட்டன் மாவட்ட நீதிபதியும் நீதவானுமான எம்.பரூக்தீன் நேற்று (07) உத்தரவிட்டுள்ளார்.

நாவலப்பிட்டி – நவதிஸ்பனையைச் சேர்ந்த ரம்பொடகெதர பிரசன்ன பண்டார (வயது 46) என்பவரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.



அவரின் சாரதி அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன், பஸ்ஸின் உரிமையாளரை நேற்று (07) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, அவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். பிரதான சந்தேக நபரான சாரதி, 10 இலட்ச ரூபாய் கொண்ட இரு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஹட்டனில் இருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பயணிகள் பஸ் மல்லியப்பூ பிரதேசத்தில் கடந்த டிசம்பர் மாதம் சனிக்கிழமை (21) பயங்கர விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், மூன்று பேர் உயிரிழந்திருந்ததுடன், 30 பேர் படுகாயமடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## முழு நேர வர்த்தகமாக மாறும் இலங்கையின் கல்வி !

பரீட்சை வினாத்தாள்கள் கசிவடைவது தற்போது இலங்கையின் கல்வி கட்டமைப்பை அபாயத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

இவ்வாறு பரீட்சை வினாத்தாள்கள் கசிவதன் மூலம் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பாரிய சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

அதற்கான காரணம் பாரிய துன்பங்களையும், சிரமங்களையும் மற்றும் இடையுறுகளையும் அனுபவித்து பரீட்சைக்கு தோற்றி அதற்கான பெறுபேறுகள் கிடைக்கும் முன்னரே பல தடைகள் வருவதால் ஆகும்.

தரம் IIஇன் தவணைப் பரீட்சை வினாத்தாள் அண்மையில் கசிந்திருந்தமை பேசுபொருளாக மாறியுள்ளது. இதற்கு முன்னர் புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள் கசிவடைந்திருந்தது.

குறிப்பிட்ட காலங்களாக பல சிரமத்திற்கு மத்தியில் கற்று, பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் வினாத்தாள் கசிவடைந்து விட்டதாக செய்திகள் வெளியாகின்றன.

இதனால் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களாக இருக்கட்டும், மாணவர்ககளின் பெற்றோர்களாக இருக்கட்டும் உள ரீதியாக பாதிக்கப்படுகின்றனர்.

ஏனெனில், இவ்வாறு பரீட்சை வினாத்தாள்கள் கசிவடைவதன் மூலம் பரீட்சை திணைக்கள அதிகாரிகள் மீள பரீட்சையை நடத்தினால், மீண்டும் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்ற ஒரு எண்ணம் மாணவர்களையும், அவர்களின் பெற்றோர்களையும் உள ரீதியான சிரமத்திற்கு உள்ளாக்குகிறது.

ஒரு பரீட்சையை மீள நடத்துவது என்பது அவ்வளவு இலகுவான ஒரு விடயம் அல்ல, அதற்கு மேலதிகமாக பொதுமக்கள் நிதியானது செலவு செய்யப்படுகின்றது.

இதனைக் கருத்திற் கொண்டே, அண்மையில் புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளில் கசிவடைந்திருந்த மூன்று வினாக்களுக்கு, பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் மூன்று புள்ளிகள் வீதம் வழங்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இது மாணவர்களின் சார்பிலும், நாட்டின் நிலையைக் கருத்திற் கொண்டும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஆகும்.

இதனை ஆதரித்தவர்கள் மட்டுமன்றி எதிர்த்தவர்களும் இருந்தனர். மீள பரீட்சையை நடத்தியே ஆக வேண்டும் என ஒரு சாரர் வழக்குத் தொடர்ந்தும் இருந்தனர். இதன் காரணமாகவே பரீட்சை வினாத்தாள் கசிவு என்பது சமூகத்தில் பேசுபொருளாக மாறியிருந்தது. நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுமுள்ளது.

இதற்கு நீதிமன்றம் மூலம் உரிய தீர்ப்புகள் வழங்கப்பட்டாலும் கூட அதனைத் தொடர்ந்து மீண்டும் பரீட்சை வினாத்தாள் கசிவு இடம்பெற்றுள்ளமை இலங்கை சட்டத்தை அவமதிக்கும் ஒரு செயற்பாடாகவே பார்க்கப்படுகிறது. அதுவும் கல்வி தொடர்பான விவகாரம்.

ஆக, புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் விடயத்தில் எவரும் சரியான ஒரு பாடத்தை கற்றுக்கொள்ளவில்லை என்பது தெரிகிறது. இதன் காரணமாகவே, மீண்டும் அதே மாதிரியான ஒரு பிரச்சினை எழுந்துள்ளது.

இதற்கும் எவ்வாறானதொரு தீர்மானம் எட்டப்படும் என்பதில் இன்னமும் சிக்கல் நிலை தொடர்ந்தே வருகிறது.

இலங்கை தற்போது இருக்கும் சூழலில் கல்விக்கு சரியான ஒரு அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பது கட்டாயக் கட்டாயமாகும்.

நிலவி வரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் அன்றாட உணவுத் தேவையை பூர்த்தி செய்துக் கொள்வதற்கும் சாதாரண மக்கள் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறான ஒரு பின்னணியிலேயே, பெற்றோர்கள் பிள்ளைகளை சிரமத்திற்கு மத்தியில் பாடசாலைகளுக்கும், மேலதிக வகுப்புகளுக்கும் அனுப்பி கற்றலில் தேர்ச்சியாளனாக மாற்றுகின்றனர்.

ஒரு மாணவன் கற்றுத் தேர்ந்து சிறந்த பிரஜையாக உருவாவதில் பெற்றோர்களுக்கு எந்த அளவுக்கு பொறுப்பு உள்ளதோ அதை விட நூறு மடங்கான பொறுப்பு கல்வி புகட்டும் ஆசிரியர்களுக்கும் உண்டு.

எனினும், முன்னுதாரணமாக திகழ வேண்டிய ஒரு சில ஆசான்களே, இவ்வாறு பரீட்சை வினாத்தாள்கள் கசிவடைவதற்கு ஒரு காரணமாக இருக்கின்றனர் என்பது தலைகுனிய வேண்டிய ஒரு விடயம் ஆகும்.

போட்டித்தன்மை மிக்க இந்த நூற்றாண்டில் அனைத்துமே போட்டியாகவே பார்க்கப்படுகின்றன. போட்டி மற்றும் வர்த்தக நோக்கில் கல்வியும் இணைந்தது இன்று நேற்று அல்ல.

பாடசாலைக் கல்வியை விடவும் மேலதிக வகுப்புகளுக்கு என்று முன்னுரிமை வழங்கப்பட்டதோ அன்று ஆரம்பித்தது இந்தக் கல்வி வர்த்தகம்.

மேலதிக வகுப்புகளை நடத்தி வரும் ஒரு சில ஆசிரியர்கள் தன்னிடம் கற்கும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற வேண்டும் என்ற வர்த்தக நோக்கில் இவ்வாறான குற்றங்களை புரிந்தும் வருகின்றனர். இது ஒரு சமூக சீர் கேடு என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்தில்லை.

இந்த சம்பவங்கள் மூலம் நாட்டில் குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு மனநிலை ஏற்படுகிறது.

கல்வி முழு நேர வர்த்தகமாக மாறி விட்டது. அதனை நாம் ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும்.

ஆக, பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட தற்போதைய அரசாங்கம் பல கல்விமான்களையும், கலாநிதிகளையும் கொண்டது. கல்வியின் தேவையும், பெறுமதியும் உணராதவர்கள் யாரும் இந்த அரசாங்கத்தில் பதவி வகிக்கவில்லை.

தொழிநுட்பம் உலகை ஆண்டு வரும் தற்போதைய சூழலில், பரீட்சை வினாத்தாள்கள் கசிவடையாத விதத்திலான முறைமைகளுடன் பரீட்சைகளை நடத்தவும், இவ்வாறான குற்றங்களை இழைப்பவர்கள் மீது முறையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

இதற்கு மேலும் இந்நிலை தொடரக்கூடாது. அவ்வாறு தொடருமேயானால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களே!





# ஜஸ்டின் ட்ரூடோ சகாப்தம் முடிவுக்கு என்ன காரணம்?



கனடாவின் லிபரல் கட்சிக்குள் அதிகரித்துவரும் அழுத்தங்களைத் தொடர்ந்து, ஒன்பது ஆண்டுகாலமாக தான் வகித்து வந்த பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார். தனது லிபரல் கட்சி ஒரு புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வரை மட்டுமே தான் பதவியில் நீடிக்கப் போவதாகவும், மார்ச் 24 வரை நாடாளுமன்றம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படும் எனவும் ட்ரூடோ தெரிவித்தார். “அடுத்த தேர்தலில், மக்கள் விரும்பும் தலைவரை தேர்வு செய்வதற்கான உரிமை கனடாவுக்கு உள்ளது. உட்கட்சி மோதல்களை மட்டுமே கவனித்துக்கொண்டிருந்தால், என்னால் அந்த தேர்தலில் ஒரு நல்ல வேட்பாளராக இருக்க முடியாது என்பது தெளிவாகிறது.” என திங்கட்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் ட்ரூடோ தெரிவித்தார். கனடாவில் இந்த ஆண்டின் பிற்பகுதியில் நாடாளுமன்ற தேர்தல்கள் நடக்கவிருக்கும் நிலையில், ட்ரூடோ மீதான கனேடியர்களின் அதிருப்தி அவரது கட்சியின் வெற்றிக்கு ஒரு பெரிய தடையாக மாறியுள்ளது.

### ட்ரூடோவுக்கு எதிரான உட்கட்சி அழுத்தங்கள்

ட்ரூடோ பதவி விலக வேண்டுமென்ற அழுத்தங்கள் அவரது லிபரல் கட்சிக்குள் இருந்து எழுந்தன. டிசம்பரில் கனடாவின் துணைப் பிரதமரும் ட்ரூடோவின் நீண்ட கால நண்பருமான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் திடீரென இராஜினாமா செய்தபோது, இந்த அழுத்தம் அதிகரித்தது. ஃப்ரீலேண்ட் தனது இராஜினாமா கடிதத்தில், “அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் கனேடிய பொருட்கள் மீதான வரி தொடர்பாக பல அச்சுறுத்தல்களை விடுக்கிறார். ஆனால் ட்ரம்ப் முன்வைக்கும் இந்த “கடுமையான சவாலை“ எதிர்கொள்ள ட்ரூடோ போதுமான அளவு பணியாற்றவில்லை” என குற்றம் சாட்டினார். கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25% வரி விதிக்கப்படுவதாக ட்ரம்ப் உறுதியளித்துள்ளார். இது கனடாவின் பொருளாதாரத்தை கணிசமாக பாதிக்கும் என பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். “ஃப்ரீலாண்ட் துணைப் பிரதமராகத் தொடர்ந்து செயல்படுவார் என்று நம்பினேன். ஆனால் அவரது முடிவு வேறுவிதமாக இருந்தது” என ட்ரூடோ செய்தியாளர்களிடம் தெரிவித்தார். ட்ரம்பின் இந்த அச்சுறுத்தலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவுடனான எல்லையில் புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்தப்போவதாக கனடா அறிவித்துள்ளது. ட்ரம்ப் ஒரு ஒன்லைன் பதிவில், வரிகள் தொடர்பான அழுத்தம் ட்ரூடோவின் இராஜினாமாவுக்கு வழிவகுத்தது என தெரிவித்தார், மேலும் கனடாவை, “அமெரிக்காவின் 51வது மாகாணமாக மாற்ற வேண்டும்” என்ற தனது வழக்கமான கருத்தை மீண்டும் தெரிவித்தார். “கனடா அமெரிக்காவுடன் இணைந்தால், வரிகள் குறையும். கனடாவைத் தொடர்ந்து சுற்றி வரும் ரஷ்ய மற்றும் சீனக் கப்பல்களின் அச்சுறுத்தலில் இருந்து கனடா முற்றிலும் பாதுகாப்பாக இருக்கும்,” எனவும் ட்ரம்ப் அந்த பதிவில் தெரிவித்தார்.

### லிபரல் கட்சியின் அடுத்த தலைவர்

கனடாவில் 2019 முதல், லிபரல் கட்சி பெரும்பான்மை இல்லாமல் ஆட்சி செய்து வருகிறது. ஃப்ரீலாண்டின் இராஜினாமாவைத் தொடர்ந்து, ஆட்சியைத் தக்கவைக்க லிபரல் கட்சிக்கு உதவிய பிற கட்சிகளின் ஆதரவை ட்ரூடோ இழந்தார். அதாவது இடதுசாரி சார்பு கொண்ட புதிய ஜனநாயகவாதிகள், மற்றும் கியூபெக் தேசியவாத கட்சியான பிளாக் கியூபெகோயிஸ் (Bloc Quebecois) போன்ற கட்சிகளின் ஆதரவை இழந்தார். கனடாவின் மிகப்பெரிய எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி, கருத்துக்கணிப்புகளில் பல மாதங்களாக லிபரல் கட்சியை விட முன்னிலையில் உள்ளது. ஒரு பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால், லிபரல் கட்சி கணிசமான தோல்வியை சந்திக்க நேரிடும் என்று கன்சர்வேடிவ் கட்சி தெரிவிக்கிறது. இப்போது லிபரல் கட்சியினர் அடுத்த தேர்தலுக்கான தங்கள் கட்சியின் முகமாக இருக்க ஒரு புதிய தலைவரை தேர்ந்தெடுப்பார்கள். இந்தத் தேர்தல் ஒக்டோபர் 20 அல்லது அதற்கு முன் நடைபெற வேண்டும். இந்த உட்கட்சி தேர்தல் வெளிப்படையாக நடைபெறும் என்றும், பிரதமர் அலுவலகம் இந்த செயல்முறையிலிருந்து முற்றிலும் விலகி இருக்கும் என்றும், லிபரல் கட்சி உறுப்பினர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமை அவர்களிடமே வழங்கப்படும் என்றும் மூத்த அரசாங்க அதிகாரி ஒருவர் பிபிசியிடம் தெரிவித்தார். ஊடகவியலாளர்களிடம் பேசிய பிளாக் கியூபெகோயிஸ் தலைவர் ஈவ்ஸ்-பிரான்சுவா பிளான்செட், “லிபரல் கட்சியினர் தங்கள் புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்தவுடன், கனடாவுக்கான தேர்தல் முன்கூட்டியே நடத்தப்பட வேண்டும்“ என பரிந்துரைத்தார்.

### ட்ரூடோ சகாப்தத்தின் முடிவு

1970கள் மற்றும் 80களில் கனடாவின் அரசியலில் ஆதிக்கம் செலுத்திய முன்னாள் கனேடிய பிரதமர் பியர் ட்ரூடோவின் மகன் தான் ஜஸ்டின் ட்ரூடோ. ஜஸ்டின் ட்ரூடோ யாரும் எதிர்பாராத சமயத்தில், 2015இல் தனது கட்சியை பெரும்பான்மை ஆதரவுடன் கனடாவின் அதிகாரத்திற்கு கொண்டு வந்தார். ட்ரூடோவின் அமைச்சரவையில் வழங்கப்பட்ட பாலின சமத்துவம் (இப்போதும் 50% பெண் உறுப்பினர்கள் என்ற அமைப்பே தொடர்கிறது) கனடாவில் பழங்குடி மக்களுடனான நல்லிணக்கச் செயல்பாடுகளில் முன்னேற்றம், தேசிய கார்பன் வரி கொண்டு வரப்பட்டது, குடும்பங்களுக்கு வரி இல்லாத குழந்தை நலத் திட்டத்தை அமுல்படுத்துதல், மற்றும் கஞ்சாவை (Recreational cannabis) சட்டப்பூர்வமாக்குதல் போன்றவை அவரது புகழ்பெற்ற அரசியல் திட்டங்களில் அடங்கும். ட்ரூடோவின் இராஜினாமாவைத் தொடர்ந்து, அசெம்பிளி ஆஃப் ஃபர்ஸ்ட் நேக்ஷன்ஸ் (Assembly of First Nations) அமைப்பின் தேசியத் தலைவர் சிண்டி உட்ஹவுஸ் நெபினாக், பழங்குடியின பிரச்சனைகளில் ட்ரூடோ முன்னெடுத்த நடவடிக்கைகளை பாராட்டினார். நெபினாக் வெளியிட்ட அறிக்கையில், “அசெம்பிளி ஆஃப் ஃபர்ஸ்ட் நேக்ஷன்ஸ் அமைப்பின் முக்கியமான பிரச்சினைகளைத் தீர்க்க பல அர்த்தமுள்ள நடவடிக்கைகளை ட்ரூடோ எடுத்துள்ளார்” எனவும் “இதில் இன்னும் நிறைய வேலைகள் எஞ்சியுள்ளன, ஆனால் ட்ரூடோவின் நடவடிக்கைகள் எதிர்கால முன்னேற்றத்திற்கான ஒரு அடித்தளத்தை அமைத்துள்ளன.” என தெரிவித்தார். ட்ரூடோவின் முதல் பதவிக்காலத்தில் ஊழல் புகார்கள் எழுந்தன. அதன் பிறகு கொரோனா பெருந்தொற்று காலத்தின் தடுப்பூசி தொடர்பான ஆணைகள் மற்றும் பிற கட்டுப்பாடுகளும் சில கனேடியர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டன. இது 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், “ஃப்ரீடம் கான்வாய் டிரக்“ (Freedom Convoy truck) போராட்டங்களுக்கு வழிவகுத்தது. இறுதியில் போராட்டக்காரர்களை அகற்ற அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தினார் ட்ரூடோ. மிக சமீபத்திய ஆண்டுகளில், கனடாவில் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவினம் மற்றும் ட்ரூடோவின் ஆட்சி மீதான விரக்தி காரணமாக அவரின் செல்வாக்கு குறைந்து வருகிறது. செப்டம்பர் மாதம் `Ipsos“ தளத்திற்கு பதிலளித்தவர்களில் 26% பேர் மட்டுமே ட்ரூடோ பிரதமருக்கான சிறந்த தேர்வு என தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

மைக் வென்ட்லிங், நாடின் யூசிஃப், ஜான் சுட்வொர்த்
நன்றி பிபிசி



# பூநகரி நாகதேவன் இறங்குதுறையின் அவலம்





(ஜதுர்சிகா)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் உள்ள நாகதேவன் இறங்குதுறையானது சேதமடைந்து காணப்படுவதுடன் கடற்றொழிலுக்குச் சென்று வருவதில் கடத்தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கடற்தொழில் கிராமங்களில் ஒன்றான பூநகரி நாகதேவன் துறையிலுள்ள இறங்குதுறையானது கடந்த 1993 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாக முற்று முழுதாக சேதமடைந்து இது வரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது. குறித்த இறங்குதுறை இவ்வாறு காணப்படுவதனால் கடற் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாகக் கடற்கரைக்குச் செல்லும் குறித்த பாதையானது மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதுடன் துவிச்சக்கர வண்டிகளில் அல்லது வேறு எந்த வாகனங்களிலோ செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. கடற்கரையில் உபகரணங்களைப் பாதுகாப்பதிலும் பெரும் இடர்களை எதிர்கொள்வதாகச் சுட்டிக் காட்டியுள்ளனர். இதேவேளை நாளாந்தம் கடற்றொழிலுக்குச் சென்று வருவதிலும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கடத்தொழிலாளர்கள் குறித்த பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் நாளாந்தம் இவ்வாறு பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆகவே குறித்த இறங்கு துறையைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வெற்றிலைக்கேணியில் முதல் தொழில் ஆரம்பம்



(பு.கஜிந்தன்)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் நேற்று முன்தினம் (6) முதல் நாள் கடற்றொழிலுக்காகப் படகு ஆசிர்வாதத்துடன் கடலில் இறக்கப்பட்டது

வருடத் திருப்பலியின் போது குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த ப. மெல்பிறின்(சுரேஸ்) இந்த வருடத்திற்கான தொழிலை வெற்றிலைக்கேணி மக்கள் சார்பாக முதன் முதலாக ஆரம்பித்து வைத்தார். பங்குத்தந்தை அமல்ராஜ் அடிகளாரின் ஆசிர்வாதத்துடனும் ஊர்மக்களின் ஆதரவுடனும் நேற்று முன்தினம் காலை 07.30 மணியளவில் படகு கடலில் இறக்கப்பட்டது.

இதன் பின்னர் ஏனைய மீனவர்களின் படகுகள் ஒவ்வொன்றாக தங்களுடைய மீன்பிடி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தன.

குறித்த நிகழ்வில் பங்குத்தந்தை, கிராம மக்கள், வெற்றிலைக்கேணி கடற்றொழில் சங்க நிர்வாகத்தினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# உரும்பிராய் தாக்குதல் சம்பவம்: விசாரனையில் நால்வர் கைது

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் – உரும்பிராய் பகுதியில் ஒருவரைக் கட்டி வைத்துத் தாக்குதல் மேற்கொண்ட குழுவைச் சேர்ந்த நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கடந்த 24ஆம் திகதி உரும்பிராய் பகுதியில் உள்ள வெதுப்பகத்திற்கு சென்ற கூலித் தொழிலாளி ஒருவர், நிலத்தில் கிடந்த தங்க ஆபரண பொதியை வெதுப்பகத்தில் கொடுத்து, அதைத் தவற விட்டவரிடம் கொடுக்குமாறு கூறிய,அதன் பின்னர் இரு முறை அது தொடர்பில் வெதுப்பகத்தில் விசாரித்துள்ளார்.

குறித்த ஆபரணம் உரியவரிடம் சேரவில்லை என்ற விடயம் தெரிய வந்த நிலையில் அவர் அது குறித்து விசாரித்தவேளை அங்கு இருந்த கும்பல் அவரை கட்டி வைத்துத் தாக்குதல் நடாத்தியது. இச்சம்பம் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் சி.ஏ. தனபாலவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு நான்கு சந்தேக நபர்கள் நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வருடப்பிறப்பு தினத்தில் மதுபோதையிலிருந்ததால் அந்த தாக்குதலை நடாத்தியதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். சுகாதார நகரத் திட்டம்; ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

(பு.கஜிந்தன்)



"யாழ்ப்பாணம் – சுகாதார நகரத் திட்டத்தின்" முன்னேற்றம் தொடர்பான கலந்தாய்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் திங்கட்கிழமை காலை (06) ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. உலக சுகாதார நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட விடயப் பரப்புக்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது. பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்களின் பாவனையை மட்டுப்படுத்துவதன் தேவைப்பாடு யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள சில வீதிகளை ஒரு வழிப்பாதையாக்குவதன் அவசியம் தொடர்பில் யாழ். மாநகர சபை ஆணையாளர் ஊடாக குழு அமைத்து இறுதித் தீர்மானம் மேற்கொள்ளுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார். மேலும் யாழ். நகர மத்தியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தின் ஊடாக எழுந்துள்ள நெருக்கடிகள் தொடர்பில் பல தரப்புக்களும் சுட்டிக்காட்டின.

பஸ் தரிப்பிடத்தை இடமாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. அது தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையினருடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும். திண்ம கழிவகற்றலில் எரியூட்டி அமைப்பது தொடர்பில் திட்டம் முன்மொழியப்பட்டாலும் அதற்கான நிதி மூலம் மற்றும் பொருத்தமான இடத்தைக் கண்டறிவது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடுமாறு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார்.

யாழ். நகரப் பகுதியிலுள்ள பூங்காக்களை மேம்படுத்துவது மற்றும் நீச்சல் தடாகத்துக்குப் பொருத்தமான இடத்தைக் கண்டறிவதும் ஆராயப்பட்டது.

ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு அடுத்த மாதம் மீண்டும் கலந்துரையாடல் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

# வவுனியாவில் 113 பேருக்கு டெங்கு நோய் தாக்கம்

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு 113 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மழைக் காலங்களில் டெங்கு நுளம்பு பெருக்கும் வகையில் நீர் தேங்கி நிற்காமல் இருப்பதற்காகச் சுகாதார பரிசோதகர்கள், பொலிசார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

எனினும், 2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை 113 பேர் வவுனியாவில் டெங்கு நோயினால் பாதிப்படைந்தனர். அதில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 82 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் குணமடைந்து தற்போது வீடுகளுக்குச் சென்றுள்ளனர் எனவும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

# இரணைமடுக் குளப் பகுதியில் கால் வீங்கி அவதிப்படும் யானை



கிளிநொச்சி இரணைமடுக் குளத்தை அண்டிய பகுதியில் 10 நாட்களுக்கு மேலாகக் காட்டு யானை ஒன்று கால் வீங்கிய நிலையில் மிகவும் துன்பப்பட்டு வருவதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்திற்கு உள்ளும் குளக்கட்டுக்குக் கீழாகவும் இந்த காட்டு யானைக் கால் வீங்கிய நிலையில் மிகவும் துன்பப்பட்டு வருகின்றது.

இதுவரை வனஜீவராசிகள் திணைக்களமோ, அது சம்பந்தப்பட்ட திணைக்களங்களோ எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இந்த யானை வேதனையுடன் அலைந்து திரிவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த யானைக்கு உரியச் சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

# விவசாய நிலங்களில் கட்டடங்கள்



(கி.வசந்தன்)

வவுனியாவில் ஏ9 வீதியை அண்டிய பல வயல் நிலங்களில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அரச அதிகாரிகள் அசமந்தப் போக்கில் உள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வவுனியா, தாண்டிக்குளம், நொச்சிமோட்டை, பேயாடி கூழாங்குளம் போன்ற பகுதிகளில் வயல் நிலங்களில் மண்ணிட்டு நிரப்பி மேட்டு நிலங்களாகக் காட்டி கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக விவசாயம் செய்வதற்கான நிலங்கள் அற்றுப் போகின்ற நிலைமை வவுனியா மாவட்டத்தில் உருவாகுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட விவசாய திணைக்கள அதிகாரிகளுக்குத் தெரிவித்த போதிலும் அவர்களும் சில விடயங்களில் கண்டும் காணாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

# மோட்டர் சைக்கிளில் கஞ்சா கடத்திய இருவர் கைது

(கி.வசந்தன்)

கிளிநொச்சியில் இருந்து வவுனியாவிற்கு மோட்டர் சைக்கிளில் கஞ்சா கடத்தியதாக பெண் உட்பட இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தைப் பொலிசார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது கிளிநொச்சியில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்த மோட்டர் சைக்கிள் ஒன்றிலிருந்து 700 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அதில் பயணித்த 36 வயதுடைய பெண் ஒருவரும், அவரது சகோதரர் எனக் கூறப்படும் 30 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து இரண்டு இலட்சத்து 72 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின் க இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஓமந்தைப் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

# கொடித்தோடை செய்கையாளர்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை






(ஜதுர்சிகா)

கிளிநொச்சியில் கொடித்தோடை செய்கையாளர்களுக்கு உரிய விலை கிடைக்காமையால் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கொடித்தோடை சந்தைப்படுத்தல் வசதிகளுக்காக நிறுவப்பட்டுள்ள கொள்வனவு மற்றும் பதப்படுத்தல் நிலையத்தினால் உரிய விலைக்குக் கொள்வனவு செய்யாமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் நிலக்கடலை செய்கை மற்றும் மிளகாய் செய்கை என்பவற்றுடன் கொடித்தோடை செய்கை என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன.

இத்திட்டத்தின் ஒன்றான கொடித் தோடை உற்பத்தி திட்டத்தின் கீழ் 200 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்ட போதும் குறிப்பிட்ட சில விவசாயிகள் மாத்திரமே உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் கொடித்தோடை உற்பத்தியாளர்களுக்கு உரிய சந்தை வாய்ப்பின்மை காரணமாக தாங்கள் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டி உள்ளனர்.

இத்திட்டத்தின் ஒரு அங்கமான கிளிநொச்சி அக்கராயன் குளத்தில் சுமார் 85. 11 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கொடித்தோடை கொள்வனவு மற்றும் பதப்படுத்தல் நிலையத்தினால் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பழத்தினை ஒரு கிலோ 650 முதல் 700 ரூபாய்க்கு கொள்வனவு செய்வதாகக் குறிப்பிட்ட போதும் தற்போது 150 ரூபாய்க்கும் குறைவான விலைகளிலேயே ஒரு கிலோ பழத்தினை கொள்ளளவு செய்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளனர்.

அதாவது இத்திட்டமானது நாட்டின் அன்னிய செலாவணியை ஈட்டும் வகையிலும் விவசாய நவீன மயமாக்கலுக்கு அமைவாகவும் ஏற்படுத்தப்பட்ட இத்திட்டமானது விவசாயிகளை மேலும் நட்டமடைய வைக்கும் ஒரு திட்டமாகவே காணப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டி உள்ளனர்.









# மீண்டும் முக கவசமா?

**இந்நோயால் பாதிக்கப்பட்ட நபர் இருமும்போது அல்லது தும்மும்போது வெளிப்படும் சுவாசத் துளிகளால் பரவும் வாய்ப்பு அதிகம்..!**



எஸ்.டொரின்

ஒருவன் HEALTH GOALS
சுகவாழ்வுக்கோர் வழி

கடந்த சில நாட்களில், ஹியூமன் மெட்டாப்நியூமோவைரஸ் (HMPV) உலகம் முழுவதும் தலைப்புச் செய்தியாக மாறியுள்ளது.

இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளை பெரிதும் தாக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்பட்டு வரும் நிலையில் மீண்டும் முகக் கவசம் அணிந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனடிப்படையில், HMPV ஆனது Paramyxoviridae குடும்பத்தைச் சேர்ந்தது, இது சுவாச ஒத்திசைவு வைரஸ் (RSV) மற்றும்்ியசயகைெடரநணெய வைரஸ் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது.

இது முதன்மையாக மேல் மற்றும் கீழ் சுவாசக்குழாய்களை பாதிக்கிறது மற்றும் கைக்குழந்தைகள் வயதானவர்கள் மற்றும் நோயெதிர்ப்பு குறைபாடுள்ள நபர்களுக்கு மிகவும் ஆபத்தானது எனவும் கூறப்படுகின்றது.

பெரும்பாலான ஆரோக்கியமான மக்கள் லேசான அறிகுறிகளுடன் குணமடைந்து விடலாம் ஆனால், கடுமையான நோய்த்தொற்றுகள் மூச்சுக்குழாய் அழற்சி, நிமோனியா அல்லது கடுமையான சுவாசக் கோளாறு நோய்க்குறி (ARDS) ஆகியவற்றிற்கு வழிவகுக்கும் என வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**HMPV தொற்றுநோயானது பின்வரும் வழிகளில் பரவுகிறது: -**

பாதிக்கப்பட்ட நபர் இருமல் அல்லது தும்மும்போது வெளிப்படும் சுவாசத் துளிகள்.

- பாதிக்கப்பட்ட நபருடன் நேரடி தொடர்பு.
- அசுத்தமான பரப்புகளைத் தொட்டு, பின்னர் முகம், கண்கள் அல்லது வாயைத் தொடுதல்.
- பிற பருவகால சுவாச வைரசுகளைப் போலவே, குளிர்காலத்தின் பிற்பகுதியிலும் வசந்த காலத்திலும் இந்த வைரஸ் மிகவும் தீவிரமாக பரவுகிறது.

**HMPV-ன் அறிகுறிகள்**

HMPV-ன் அறிகுறிகள் பெரும்பாலும் காய்ச்சல் அல்லது RSV போன்ற பிற சுவாச நோய்த்தொற்றுகளைப் போலவே இருக்கும்.

இதன் அறிகுறிகள் என்னவெனில்,

- மூக்கு ஒழுகுதல் அல்லது அடைப்பு: தொடர்ந்து மூக்கில் நெரிசல் மற்றும் சளி ஒழுகுதல்
- இருமல்: வறண்ட இருமல் அல்லது தொடர்ச்சியான இருமல் இது காலப்போக்கில் மோசமடையலாம்.
- காய்ச்சல்: லேசானது முதல் மிதமானது வரை இருக்கும்.
- தொண்டை வலி: தொண்டையில் எரிச்சல் மற்றும் தொடர்ச்சியான அசௌகரியம்.
- சுவாசிப்பதில் சிரமம்: சுவாசிக்கும்போது ஒரு விசில் சத்தம் ஏற்படுவது, இது காற்றுப்பாதை அடைப்பைக் குறிக்கிறது.
- மூச்சுத் திணறல்: சுவாசிப்பதில் சிரமம், குறிப்பாக கடுமையான சந்தர்ப்பங்களில். - சோர்வு மற்றும் உடல்நலக்குறைவு: தொடர்ச்சியான சோர்வு மற்றும் எப்போதும் சோர்வாக இருப்பது.
- மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் நிமோனியா: கடுமையான சந்தர்ப்பங்களில் மருத்துவ தலையீடு தேவைப்படும் நுரையீரல் தொற்று ஏற்படலாம்.
- கைக்குழந்தைகள், வயதானவர்கள் மற்றும் பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்புகளைக் கொண்ட நபர்களுக்கு, HMPV கடுமையான சுவாச சிக்கல்களை ஏற்படுத்தும், இதனால் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

**இந்த வைரஸ் முதன்மையாக மேல் மற்றும் கீழ் சுவாசக்குழாய்களை பாதிப்பதுடன் கைக்குழந்தைகள் வயதானவர்கள் மற்றும் நோயெதிர்ப்பு குறைபாடுள்ள நபர்களுக்கு மிகவும் ஆபத்தானது..!**

**HMPV தடுப்பு வழிமுறைகள்**

தற்போது HMPV க்கு குறிப்பிட்ட வைரஸ் தடுப்பு சிகிச்சை அல்லது தடுப்பூசி எதுவும் இல்லாததால், நோய்த்தொற்றின் அபாயத்தைக் குறைப்பதிலும் அதன் பரவலைக் குறைப்பதிலும் தடுப்பு கவனம் செலுத்துவது அவசியம்.

- கை சுகாதாரம்: குறைந்தது 20 விநாடிகளுக்கு சவர்க்காரம் மற்றும் தண்ணீர் வைத்து கைகளை தவறாமல் கழுவவும்.
- சானிடைசர்களை பயன்படுத்தவும்: சவர்காரம் கிடைக்காதபோது அல்கஹாகோல் சார்ந்த சானிடைசர்கள் பயனுள்ளதாக இருக்கும்.
- நெருங்கிய தொடர்பைத் தவிர்க்கவும்: சுவாச நோயின் அறிகுறிகளைக் காட்டும் நபர்களிடமிருந்து விலகி இருங்கள்.
- இருமல் அல்லது தும்மும்போது உங்கள் வாய் மற்றும் மூக்கை மூடிக்கொள்ளவும்.
- மேற்பரப்புகளை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்: கதவு கைப்பிடிகள், தொலைபேசிகள் மற்றும் மேசைகள் போன்ற அடிக்கடி தொடும் மேற்பரப்புகளை தவறாமல் சுத்தம் செய்யவும்.
- உங்கள் முகத்தைத் தொடுவதைத் தவிர்க்கவும்: கழுவப்படாத கைகளால் உங்கள் கண்கள், மூக்கு மற்றும் வாயைத் தொடுவதைத் தவிர்க்கவும்.
- உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் வீட்டிலேயே இருங்கள்: வைரஸ் பரவுவதைத் தடுக்க பாதிக்கப்பட்ட நபர்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வேண்டும்: நோய்த்தொற்றுகளில் இருந்து பாதுகாக்க நோயெதிர்ப்பு மண்டலத்தை பலப்படுத்துவது அவசியம். சரியான ஊட்டச்சத்து, உடற்பயிற்சி மற்றும் தூக்கத்துடன் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பராமரிக்கவும்.

# குண்டானவர்கள் உடல் எடையை பேணுவது எப்படி?



உடல் குண்டானவர்கள் மெலிந்து விட வேண்டும் என்பதற்காக ஒரே அடியாக வெறுத்து பட்டினி கிடக்கக்கூடாது.

உடலில் இருக்கும் கொழுப்பை குறைக்க உணவின் அளவை குறைக்க வேண்டும். அதாவது, நன்கு வியர்க்கும் அளவுக்கு உடற்பயிற்சி செய்ய வேண்டும். சாப்பிட்ட உடன், ஒரு போதும் தூங்கி விடக்கூடாது. அதேப்போல வாய் நிறைய அமுக்கிக் கொண்டும் சாப்பிடக்கூடாது. சற்று நிதானமாக, சிறிது நேரம் எடுத்து மென்று சுவைத்து சாப்பிட வேண்டும்.



**குளிர்சாதனங்கள், கோப்பி, பால்தேநீர் போன்றவற்றை அடிக்கடி குடிப்பதை தவிர்த்து விட்டு இளநீர், பழச்சாறு பருகும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்..!**

குண்டானவர்கள் பால் குடிப்பதை தவிர்த்து விட வேண்டும். அதே நேரத்தில் ஆடை நீக்கிய பால் கொழுப்பு நீக்கிய சூப் போன்றவற்றை பருகலாம். எண்ணியில் வறுத்த பொரித்த உணவுகளை சாப்பிடக் கூடாது. இடைப்பட்ட நேரங்களில் நண்பர்களிடம் பேசிக்கொண்டோ, புத்தகம் படித்துக் கொண்டோ, டிவி பார்த்துக் கொண்டோ உணவு பொருள்களை கொறிப்பதை அறவே தவிர்க்க வேண்டும்.

குளிர்சாதனங்கள், கோப்பி, டீ போன்றவற்றை அடிக்கடி குடிப்பதை தவிர்த்து விட்டு இளநீர், பழச்சாறு பருகும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

முந்திரிபருப்பு, வேர்க்கடலை, சாஸ், இனிப்பு பல காரங்கள் சாப்பிடுவதை குறைக்க வேண்டும். உடல் குண்டாக இருப்பவர்கள் இவற்றை அறவே நிறுத்தி விட வேண்டும். உடல் எடையை மாதம் ஒருமுறை கணக்கிட்டு வர வேண்டும், மேலும் உயரத்துக்கு தகுந்தாற் போல உடல் எடையை பேண வேண்டும்.

# முகத்தில் அக்னி கட்டிகள்

முகத்தில் அக்னி கட்டிகள் ஏற்பட காரணம் என்ன? அதை கட்டுப்படுத்துவது எப்படி?

முகத்தில் ஏற்படும் கட்டிகள் (அக்னி, பிம்பிள்) பொதுவாக அதிகப்படியான எண்ணெய் சுரப்பு, அழுக்கு அல்லது தோல் நோய்களால் ஏற்படும்.







இவற்றை சரியான முறையில் பராமரிப்பது முக்கியம், ஏனெனில் தவறான முறைகள் உபயோகப்படுத்தினால் நிலைமையை மேலும் மோசமாக்கும்.

இங்கே முகத்தில் ஏற்படும் கட்டிகளைப் போக்க உதவும் சில இயற்கை வழிமுறைகள் எவை என பார்ப்போம்...

**சரியான முகத்தை சுத்தம் செய்தல்**

முகத்தில் கட்டிகள் ஏற்படுவதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று அழுக்குகள் மற்றும் எண்ணெய்கள் சேர்ந்து தோல் சாக்கடைகளை அடைத்துவிடுவதில்தான். தினமும் இரண்டு முறை ஃபேஸ்வாஷ் அல்லது சூப்பர் சுத்தமான சோப்பைப் பயன்படுத்தி முகத்தை நன்றாக சுத்தம் செய்யுங்கள்.

**சந்தனப் பொடி மற்றும் குங்குமப்பூ கலவை**

சந்தனப் பொடி சருமத்தில் உள்ள ஒழுங்கற்ற தன்மைகளை சீராக்கும் சக்தி கொண்டது. இதனுடன் குங்குமப்பூவையும் சேர்த்து காட்டு பசையுடன் கலந்து, முகத்தில் பூசினால், கட்டிகளை குறைத்து முகம் மென்மையாகும்.

**ஆப்பிள் சீடர் வினிகர்**

ஆப்பிள் சீடர் வினிகர் முகத்தில் பாக்டீரியாக்களை அழிக்கும் ஆற்றல் கொண்டது. இதை சிறிதளவு தண்ணீருடன் கலக்கி, முகத்தில் மெதுவாக தடவினால், கட்டிகள் குறையும். இது தோலின் மதிப்பை சரி செய்கிறது.

**முல்தானி மட்டி முகமூடு**

முல்தானி மட்டி சருமத்தில் உள்ள எண்ணெய் சுரப்பை கட்டுப்படுத்துவதில் உதவுகிறது. இதைத் தண்ணீர் கலந்து பூசினால், தோல் மாசுகள் சுத்தமாகின்றன, அதனால் கட்டிகள் குறையும்.

**தேன் மற்றும் எலுமிச்சை சாறு**

தேன் ஒரு நச்சுநீக்கி, மற்றும் எலுமிச்சை ஒரு சிறந்த சுத்திகரிப்பான். இதை கலந்து முகத்தில் பூசினால், கட்டிகளை சரியாக்கி சருமத்தை மென்மையாகவும் பளபளப்பாகவும் மாற்றும்.

**கற்றாழை ஜெல்**

கற்றாழை ஜெல் சருமத்தின் எண்ணெயை சரியாகக் கட்டுப்படுத்தி கட்டிகளை குறைக்கும் தன்மை கொண்டது. இயற்கையான கற்றாழையை உடைந்து, அதன் ஜெல்லை நேரடியாக முகத்தில் தடவினால், கட்டிகள் குறையும்.

காட்டு யானைகளின் நடமாட்டத்தை கண்டறிய

# கொம்பன் யானைக்கு ஜீ பீ எஸ் தொழில்நுட்ப கழுத்துப்பட்டி

( எம்.ரீ.ஆரிப் )

காட்டு யானைகளின் பாதையை அடையாளம் காண்பதற்கு யானைக் கூட்டங்களில் உள்ள பிரதான யானைக்கு அல்லது கொம்பன் யானைக்கு ஜீ பீ எஸ் தொழில்நுட்பத்துடன் கூடிய பிரத்தியேக கழுத்துப்பட்டி பொருத்த வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதற்கு விமானப்படையின் ட்ரோன் கேமராக்களினதும் உதவி கிடைத்துள்ளதாகவும் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஓயாமடுவ பகுதியில் நிலவும் காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு தீர்வாக வில்பத்து வனப்பகுதிக்கு யானை



கூடங்களை விரட்டும் நடவடிக்கையினை வனஜீவராசிகள் அதிகாரிகள் அண்மையில் ஆரம்பித்துள்ளனர்.

காட்டு யானைகளின் வழித்தடத்தை அடையாளம் காண குறித்த திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வருடாந்த உற்சவத்தில் புஷ்ப பல்லக்கு பவனி

(க.மகாதேவன்)

உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் திங்கட்கிழமை (6) ஐந்தாம் நாள் திருவிழாவில் புஷ்ப பல்லக்கு பவனி இடம்பெற்றது. இதன் போது சுவாமி உள் வீதி,வெளிவீதி வருதல் இடம்பெற்றது. பக்தர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பார்த்தசாரதிப் பெருமாளின் அருளைப் பெற்றுக் கொண்டனர்.



‘ஜெம் ஸ்ரீலங்கா-2025’;

## இன்று மாபெரும் கண்காட்சி ஜனாதிபதி பிரதம அதிதி

( பீ.எம் முக்தார்)

இலங்கையில் இரண்டாவது தடவையாக நடைபெறும் சர்வதேச மட்டத்திலான இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சி நிகழ்வு இன்று 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை பெந்தொட்ட சினமன் பீச் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முதல்நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

பேருவளை சீனன் கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பூரண அனுசரணையுடன் இக்கண்காட்சி நடைபெறும்.

சர்வதேச மற்றும் இலங்கையில் பிரபல முன்னணி இரத்தினக்கல் வர்த்தகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளதுடன் இரத்தினக்கல் வர்த்தகத்தில் ஈடுபடும் உள்நாட்டு ,வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதியாளர்களும் இதில் கலந்து கொள்ள உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. நிகழ்வில் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தலைவர் உட்பட அதிகாரிகள், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தலைவர் உட்பட உயர் அதிகாரிகள் அரசின் உயர் மட்ட அதிகாரிகள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் கடந்த வருடம் 2024 ஜனவரி மாதத்தில் இதே உல்லாச ஹோட்டலில் நடைபெற்ற முதலாவது



கண்காட்சியிலும் இறத்தினக்கல்,உள்நாட்டு சர்வதேச வர்த்தகர்கள்,ஏற்றுமதி இறக்குமதியாளர்கள் மற்றும் துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர். இந்நிலையில் எதிர்பார்க்கப்பட்ட வெற்றியை அடைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அதனை விடவும் இரண்டாவது தடவையாக நடைபெறும் 2025 ஆம் ஆண்டு கண்காட்சியில் அனுபவ வளர்ச்சி காரணமாக முன்னேற்றங்களையும் புதுப் புது முறைகளையும் கண்காட்சியில் எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கும்.

## மொனிக் ஊழியர்களை பாராட்டும் “2024 மொனிக் லெகசி விருதுகள்”

முன்னணி நுண்-நிதி நிறுவனங்களில் ஒன்றான மொனிக், 2024 ஆம் ஆண்டிற்கான தனது ஊழியர்களை பாராட்டும் விழா அண்மையில் குருநாகல் எபிடோம் ஹோட்டலில் நடைபெற்றது.







தேசிய வீடமைப்பு ஆணையாளரும் எல்.சி.பி. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சிரேஷ்ட சட்டத்தரணி காமினி பெரேரா,எல்.சி.பி. பைனான்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கே.ஜி. லீலாநந்த மற்றும் மொனிக் குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி வாசல மதுவந்த ஆகியோர் இந்த நிகழ்வில் பிரதான அதிதிகளாக கலந்துகொண்டனர்.

தமது நிறுவனம் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக வெற்றிகரமாக பயணிப்பதற்கு தமது நிறுவன ஊழியர்கள் தவறாது பங்களிப்பை வழங்கியதாக மொனிக் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி மதுவந்த வாசல ஆரியபால இதன்போது தெரிவித்தார்.

இதன்போது விற்பனை இலக்கை வெற்றிகரமாக எட்டிய அதிகாரிகளுக்கு வாகனங்கள் உட்பட பெறுமதியான பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன.

மொனிக் குழுமமானது, வீட்டுக் கடன், கட்டுமான நிதி, தங்கக் கடன், வாகனக் கடன், வணிகக் கடன் மற்றும் நுண்கடன் உட்பட அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களின் அபிலாஷைகள் மற்றும் கனவுகளை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஜரட்ட பல்கலை மாணவர்களைத் தாக்கிவர்கள் கைது

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )

ரஜரட்ட பல்கலைக்கழக தொழில்நுட்ப பிரிவு மாணவர்கள் இருவரை தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்களை மிஹிந்தலை பொலிஸார் (06) கைது செய்துள்ளனர். மிஹிந்தலை நகரை வசிப்பிடமாகக் கொண்ட 27 மற்றும் 30 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்துள்ளனர்.இச்சம்பவம் மிஹிந்தலை ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு வெளியே இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த பல்கலைக்கழக மாணவன் ஒருவன் மிஹிந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பிரிவு மாணவர்கள் கடந்த (05) இரவு பல்கலைக்கழக தொழில்நுட்ப பிரிவில் இடம்பெற்ற வருட இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு தங்களது விடுதிக்கு சென்று கொண்டிருந்த போது தாக்குதல் நடந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## அநுராதபுரம் சிறம்பியடி வீதி விபத்தில் இளைஞன் பலி

(எம் எச் எம் சியாஜ், எம் யூ எம் சனூன்)

புத்தளம் அநுராதபுரம் பிரதான வீதியின் சிறம்பியடி பகுதியில்



திங்கட்கிழமை (06) பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார் மற்றொருவர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. குறித்த விபத்தில் உயிரிழந்தவர் புத்தளம் கருவலகஸ்வெவ 8ம் கட்டைப் பகுதியைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விபத்தில் சிக்கிய மற்றுமொருவர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது நிலைமை கவலைக்கிடமாக காணப்படுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## புத்தளம் ஸாஹிராவில் தலைமைத்துவ பயிற்சி

(எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் வைஎல்டிபி தன்னார்வ தொண்டர் குழுவின் ஏற்பாட்டில் புத்தளம் ஸாஹிராஆரம்ப பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (05) பாடசாலையின் அதிபர் எஸ். ஆர்.எம்



முஹ்சி தலைமையில் பாடசாலையின் அபிவிருத்தி குழுவின் ஒத்துழைப்புடன் மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி தொடர்பான ஒரு நாள் செயலமர்வு பாடசாலையில் நடைபெற்றது. இச் செயலமர்வின் விரிவுரைகள் புத்தளம் தன்னார்வ தொண்டர் குழுவினால் வழங்கப்பட்டதாக ஸாஹிரா ஆரம்ப படசாலையின் மாணவர் தலைவர்கள் ஆசிரியர்கள் என சகலரும் கலந்து கொண்டதாக வைஎல்டிபி தலைவர் அஸ்ரிக் தெரிவித்தார்.

## சிறுகதைப் போட்டிக்கான பரிசளிப்பு விழா

( எம்.யூ.எம்.சனூன் )

புத்தளம் கிரியட் இலக்கிய வட்டத்தினால் அண்மையில் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட, "மனித நேயப் பார்வையில் பலஸ்தீனப் படுகொலைகள்" எனும் கருப்பொருள் தாங்கிய சிறுகதைப்போட்டிக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரி, கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வைபவத்தில் கவிஞரும் பன்னூலாசிரியருமான முல்லை முஸ்ரிபா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.நிகழ்வின் கௌரவ அதிதிகளாக, கலாபூஷணம் ஜவாத் மரிக்கார் முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் இஸ்டம்.ஏ. சன்ஹிர், ஓய்வுநிலை அதிபர் நாகராஜா மற்றும் நிகழ்வுக்கு அனுசரணை வழங்கிய இளம் வர்த்தகர் பர்வின் ராஜா ஆகியோர் பங்கேற்றனர். கொழும்பு, கண்டி, வியாங்கொட, ஹெம்மாத்தகம, வவுனியா, பலகத்துறை அங்கலாக இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் போட்டியில் வெற்றியீட்டிய சுமார் 50 சிறுகதை எழுத்தாளர்கள் இந்நிகழ்வில் கௌரவிக்கப் பட்டத்துடன், புத்தளம் பிரதேச பாடசாலைகளில் தேசிய ரீதியில் கலை-இலக்கியத் துறையில் பிரகாசித்த மாணவர்களும் பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டனர்.







## சதொச அரிசி களஞ்சியசாலை வளாகம் புனரமைப்பு நடவடிக்கை ஆரம்பம்

(அநுராதபுரம் எம்.ரீ. ஆரிப் )

பல வருடங்களாக கைவிடப்பட்டிருந்த ஹிங்குராங்கொட சதொச அரிசி களஞ்சியசாலை வளாகத்தை புனரமைக்கும் பணியின் முதற்கட்டமாக பாரிய துப்புரவு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சதொசவின் புதிய தலைவர் கோஸல ஹல்பவ வின் மேற்பார்வையில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செயற்பாட்டிற்கான களஞ்சியசாலையை தயார் செய்யும் நோக்கில் ஹிங்குராங்கொட பிரதேச செயலகம் , பிராந்திய சபை , நெல் சந்தைப்படுத்தல் சபை , பொலிஸ், சிவில் பாதுகாப்பு திணைக்களம்,பிர அரச



நிறுவனங்கள், விவசாய அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், விவசாயிகள் மற்றும் உள்ளூர்வாசிகளின் பங்களிப்புடன் இந்த தொண்டு நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மசிறீ பண்டார மற்றும் சுனில் ரத்னசிறி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மக்கள் மறுமலர்ச்சி முன்னணி அலுவலகத்திற்கு அமைச்சர் விஜயம்

( எம்.யூ.எம்.சனூன் )

புத்தளம் தில்லையடி அல்ஜித்தா மக்கள் மறுமலர்ச்சி முன்னணி அலுவலகத்திற்கு பொது நிர்வாகம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சர் சந்தன அபேரத்ன அண்மையில் விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

இச்சந்திப்பின் போது பல விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக புதிய அரசாங்கத்தின் நகர்வுகள், எதிர்நோக்கும் சவால்கள், எதிர்வரும் காலத்தில் மிகப் பொறுப்பு




வாய்ந்த இந்த அமைச்சின் வகிபாகம், தேசிய மக்கள் சக்தி கட்சியை மேலும் புத்தளத்தில் வலுப்படுத்த எடுக்கப்பட வேண்டிய அரசியல் முன்நகர்வுகள், உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சபைகளை கைவசப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என பல்வேறு விடயங்கள் கலந்துரை யாடப்பட்டன.

மக்கள் மறுமலர்ச்சி முன்னணியுடன் தற்போது ஒன்றிணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய கிராமங்கள் மற்றும் ஸ்தாபனங்களிடமிருந்து கட்சிக்கு கிடைக்கப்பெற்ற உட் கட்டுமான வேலை திட்டங்களின் கோரிக்கைகளின் மகஜர் ஒன்றும் அமைச்சரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் முன்னணியின் பிரதித் தலைவர் மௌலவி பீ.ஏ.எஸ்.சுப்யான், உட்பட முன்ன ணி உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# 5,000 ரூபா போலி நாணயத்தாளுடன் சம்மாந்துறையில் பெண் கைது

(முகம்மட் முக்தார்)

சம்மாந்துறை பிரதேசத்தில் 05 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் சம்மாந்துறை நீதவான் நீதிமன்றினால் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றில் போலி 05 ஆயிரம் ரூபா நாணயத்தாளுடன் வங்கியில் அடகு வைத்த நகையை கடந்த திங்கட்கிழமை(06) குறித்த வங்கியில் மீட்பதற்கு சென்ற போது நாணயத்தாள்களை பரிசோதனை செய்த போது போலி நாணயத்தாள் இருப்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து வங்கி நிருவாகம் சம்மாந்துறை பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து 05 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் நகை மீட்கச்சென்ற சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி கே.கருணாகரன் முன்னிலையில் ஆஜர் செய்த போது ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் சம்மாந்துறை பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நேர்முகப் பரீட்சை

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாண சபைக் குட்பட்ட பாடசாலைகளில் நிலவும் பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முக பரீட்சைகள் எதிர்வரும் 16,17,18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் ஜே.லியாக்கத் அலி அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 24 ம் திகதி நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 1105 பேர் குறித்த நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான அழைப்புக் கடிதங்கள் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் உத்தியாகபூர்வ இணையத்தளத்திலும் நேர்முகப்பரீட்சைக்கு தகுதியானோரின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைகள் திருமலை வரோதய நகரிலுள்ள கிழக்கு மாகாண பேரவைச் செயலகம், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கல்முனை பொலிஸ் பிரிவில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கே.எ.ஹமீட்)

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதவன் வீதி பகுதியில் கஞ்சாவுடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (06) இரவு கல்முனை விசேட அதிரடிப்படையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபரிடம் இருந்து 20 கிராம் 800 மில்லி கிராம் கஞ்சா மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு பாராட்டு





(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் 2024ஆம் ஆண்டில் சிறப்பாக பணி யாற்றிய பிராந்திய பிரிவுத் தலைவர்கள் மற்றும் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் நேற்று (06) பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன்போது பிராந்திய பணிப்பாளர் 2024ஆம் ஆண்டில் சிறப்பாக பணியாற்றிய சகலரையும் பாராட்டி நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

# கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு ரீ சேட் வழங்கி வைப்பு

(அபு அலா)

புதுவருடத்தையொட்டி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைச்சின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு புதுவருட அன்பளிப்புடன் அமைச்சின் சின்னம் பொறிக்கப்பட்ட ரீ சேட் வழங்கி வைக்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எல்.பி.மதநாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர் உள்ளிட்ட அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



இதன்போது சுகாதார அமைச்சின் செயலாளர் எல்.பி.மதநாயக்க வினால் புதுவருட அன்பளிப்பும் அமைச்சின் சின்னம் பொறிக்கப்பட்ட ரீ சேட்டை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலுக்கு வழங்குகிறார்.

# மீரா இஸ்ஸடீனின் சகோதரர் பௌமி காலமானார்

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்றை பிறப்பிடமாகவும், பொத்துவில் பிரதேசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பௌமி 49 வயதில் நேற்று 07.01.2025 காலமானார்.

இவர் அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான மீரா எஸ்.இஸ்ஸடீன் மற்றும் றமீஸ் ஆகியோரின் சகோதரரும் ஆவார். அவரின் ஜனாஸா நேற்று 07.01.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00மணியளவில் அக்கரைப்பற்று தைக்காநகர் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தார் குகதாசன் எம்பி



(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் மக்கள் சந்திப்பொன்றை நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்தார்.

இம் மக்கள் சந்திப்பில் திருகோணமலை மாவட்டத்தில் பரவலாகக் காணப்படும் கல்வி, சுகாதாரம், மருத்துவம், சுய தொழில், அபிவிருத்தி முதலிய சிக்கல்களை மக்கள் சண்முகம் குகதாசன் எம்பியிடம் தெரிவித்தனர்.

மக்களது சிக்கல்களை கேட்டறிந்த சண்முகம் குகதாசன் எம்பியிடம் உரிய நிறுவனங்களிடம் இருந்து மக்களுக்கு சிக்கல்களை தீர்க்கும் வழியினை செய்து தருவதாக உறுதியளித்தார்.

குறித்த பொது மக்கள் சந்திப்பானது ஒவ்வொரு மாதமும் நாடாளுமன்ற அமர்வு தினங்கள் தவிர்ந்த தினங்களில் இடம் பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

# சுற்றுலாத் துறையை வினைத்திறனுடன் முன்னெடுக்க திட்டங்கள்

(வெல்லாவெளி நிருபர்)

கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பெயரில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலா துறையை வினைத்திறனுடையதாக முன்னெடுக்கும் செயல் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகருக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் நோக்குடன் மாநகரத்தை அழகுப்படுத்தும் பணிகள் செவ்வாய் கிழமை (07) மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய ஆணையாளர் எஸ்.தனஜெயன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியை அண்டிய பகுதிகள் பிளாஸ்டிக் கழிவுகளால் நிரம்பிக் காணப்பட்டன. இதனைக் கருத்தில் கொண்டு மட்டக்களப்பு மாநகர சபையினால் நகரைச் சுத்தப்படுத்தும் பாரிய சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பிரதேச சமூக அபிவிருத்தி அமைப்பின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அமைப்பின் முன்னாள் தலைவர் ஐ.ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், 2025ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

இத்தெரிவில் அமைப்பின் செயலாளராக ஏ.ஆர். நர்மிலா தெரிவானார். தலைவராக மீண்டும் ஐ. ஜாபிர் தெரிவு செய்யப்பட்டார். பொருளாளராக எம். மஹ்தியா தெரிவானதோடு, உப தலைவராக எம்.எஸ்.எம். அக்ரம், உபசெயலாளராக ஏ.காமிலா, அமைப்பின் ஆலோசர்களாக எம்.ஐ. வதுர்தீன் (கப்பல் துறை அதிகார சபை), ஏ.எல்.எம். நூர்தீன், எம்.ஏ.சி. பாயிஸ் கரீம், ஏ.எஸ்.எம். நௌசாட், எம்.ஐ. சம்சுதீன், யூ.எல். சத்தார் மற்றும் இணைப்பாளராக எம்.றிபானா, அமைப்பாளராக ஏ.ஏ.கபூர், ஊடக இணைப்பாளராக எம்.ஐ.சம்சுதீன், அறிவிப்பாளராக ஏ.ஆர்.எம். நௌபீர், கணக்காய்வாளர்களாக ஏ.அஸ்மியா, எம். றிப்கா மற்றும் ஏ.எம். நவாஸ், ஐ. பாரிசா, ஏ.எல். முபிதா, எம்.எம்.பாத்திமா பானு, பி.ஐ. ஹமிதா, எம்.எஸ். ஜிப்ரியா, ஏ.ஜனுபா, ஏ.எல். றஃமான், கே.எம்.றபீக், எஸ்.எல்.ரஷீட் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# யானைப் பாதுகாப்பு வேலி அமைத்து தருமாறு கோரிக்கை

(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுகளில் காட்டு யானைகளின் தாக்குதலால் மக்கள் தமக்கு வேண்டிய பாதுகாப்பு கருதி யானைப் பாதுகாப்பு வேலி அமைத்து தருமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

காட்டுயானைகளின் தொல்லைகளால் கடந்த 10 ஆண்டுகளாக மிகவும் பாரதூரமான இழப்புக்களை, வவுணதீவு மக்கள் சந்தித்து வருகின்றனர். இதனால் அப்பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள விவசாயத்தையும் யானைகள் துவம்சம் செய்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புல்லுமலை, கித்தூள், உன்னிச்சை போன்ற விவசாயக் கிராமங்களுக்குள் காட்டு யானைகள் புகுந்து அங்குள்ள மக்களின் வாழ்வாதாரச் செய்கையான தென்னை, வாழை, நெல், சோளன் போன்ற பல பயிரினங்களை துவம்சம் செய்துள்ளன.

எனவே, கிராமங்களுக்குள் யானைகள் நுளையாமல் இருக்க யானை பாதுகாப்பு மின்சார வேலிகளை அமைத்து தருமாறு அப்பகுதிமக்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் முன்வைக்கின்றனர்.

## அக்கரைப்பற்று

# பொது நூலகத்துக்கு விருது



(ஜௌபர்.ஏ.கரீம்)

அக்கரைப்பற்று மாநகர சபையினால் 2024ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும், சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் அக்கரைப்பற்று ஹல்லாஜ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ்வைபவம் மாநகர சபை முன்னாள் ஆணையாளரும் கல்முனை மாநகர சபை ஆணையாளருமான ஏ.ரீ.எம்.றாபீ தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தேசிய நூலக ஆவணாக்கள் சேவைகள் சபையினால் 2023ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு உள்ளூராட்சி மன்ற நூலகங்களுக் கிடையில் முன்னெடுக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்களின் பிரகாரம் தேசிய ரீதியில் மிகச் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டதற்காக வழங்கப்பட்டது. அக்கரைப்பற்று மாநகர சபை பொது நூலகம் முதன் முதலாக விருது பெற்றதற்காக மாநகர சபை நூலகர் ஐ.எல்.எம்.ஹனீபாவுக்கு முன்னாள் மாநகர சபை ஆணையாளரினால் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டார்.

# கிரான் மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்த அதிகாரிகள்



(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

கிரான் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலக அதிகாரிகள் கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்கு கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜுலேகாவின் பணிப்பின் பேரில் மாவட்ட உதவிச் செயலாளர் ஜி.பிரணவன் தலைமையிலான குழுவினர் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சென்று, அங்கு கிரான் பிரதேச உதவிச் செயலாளர் லோஜினி விவேகானந்தராஜ் பங்குபற்றுதலுடன், கூளாக்காடு, முருக்கன்தீவு, பிரம்படித்தீவு ஆகிய கிராமங்களுக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் அங்குள்ள மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பற்றியும் தீர்க்கப்படாத குறைபாடுகள் பற்றியும் அவற்றை செயல்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றியும் ஆராய்ந்தனர்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள போக்குவரத்து வசதிகள், காட்டு யானைகளின் அச்சுறுத்தல்கள், பொதுமக்கள் ஆற்றைக் கடப்பதற்கான வழிமுறைகள், படகு மூலம் போக்குவரத்தை மேற்கொள்வதால் முகங்கொடுக்கின்ற இன்னல்கள் பற்றியும் ஆராயப்பட்டன.

தரம் ஒன்பதுக்கு பின்னரான கல்வியைத் தொடர்வதற்கு மாணவர்கள் முகம் கொடுக்கும் சிக்கல்கள், வெள்ளநீர் கிராமங்களுக்குள் உட்புகுவதன் பின்னரான சுகாதார பாதுகாப்பு தொடர்பாகவும் கேட்டறியப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து முருக்கன் தீவு கிராம பாடசாலை மாணவர்களுக்கு தெளிவூட்டல் மற்றும் விழிப்புணர்வு வேலைத் திட்டங்களும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், கிராமிய மட்ட சிறுவர் கழக உறுப்பினர்கள் நிர்வாகிகள் ஆகியோர் வரவழைக்கப்பட்டு அவர்களுடைய நடைமுறை செயற் பாடுகளில் எதிர்நோக்கப்படுகின்ற குறைபாடுகள் பற்றியும் கேட்டறியப்பட்டன.

# ஆலயங்கள் வழக்குகளுக்கே அதிகமாக செலவழிக்கின்றன

## ஆளுநர் நா.வேதநாயகன் கவலை தெரிவிப்பு

( பு.கஜிந்தன் )

ஆலயங்கள் இப்போது சமூகசேவைக்குச் செலவு செய்வதிலும் பார்க்க வழக்குகளுக்கே அதிகளவு பணத்தைச் செலவு செய்கின்றன என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கவலை தெரிவித்துள்ளார்.

அன்னை சிவத்தமிழ் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழா நேற்று (07) இடம்பெற்றது.

மல்லாகத்திலிருந்து அவரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்த்திப் பவனி தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலை வந்தடைந்தது. ஆலய வழிபாட்டைத் தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் இடம்பெற்றன.





இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர், உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,

1993ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் தெல்லிப்பழை பிரதேச செயலக உதவி அரசாங்க அதிபராக இருந்தமையை நினைவுகூர்ந்து அன்றைய நாட்களில் அம்மையாருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிடைத்ததாகக் குறிப்பிட்டார்.

போர் மற்றும் இடப்பெயர்வுகளின் போதும் அம்மையார் சமூகப் பணிகளைத் திறம்பட முன்னெடுத்தமையை சுட்டிக்காட்டினார். அன்றைய காலத்தில் ஆலயங்கள் சமூகப் பணிகளை முன்னெடுக்காதிருந்த சூழலில், அம்மையார் அதனைத் தொடக்கி அதன் முன்னோடியாக இருந்தார்.

இன்று ஆலயங்களில் உண்மையான கடவுள் பக்தி இல்லை. இதனால் பல ஆலயங்கள் நீதிமன்றப்படியேறியுள்ளன.

புலம்பெயர் தேசங்களிலிருந்து ஆலயங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட் டாலும் ஆலய நிர்வாகங்கள் ஒழுங்காக கணக்கறிக்கைகள் முன்வைப்பதில்லை.இது பிரச்சினைகளுக்கு அடிநாதமாக இருக்கின்றது என்றார்.

# யாழிற்கு மேலதிகமாக இரு புகையிரத சேவைகள்

( கி.வசந்தன் )

கொழும்பு – யாழ்ப்பாணத்திற்கு மேலதிகமாக இரு புகையிரத சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் நேற்று தெரிவித்தார்.




இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக யாழ் – கொழும்பிற்கு ஒரேயொரு புகையிரத சேவை மட்டும் இடம்பெற்று வருவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர். இந்நிலையில் இது தொடர்பாக,பொதுமக்கள் பல்வேறு முறைப்பாடுகளை என்னிடம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பாக ஆராய்ந்திருந்ததுடன், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

எனது வேண்டுகோளிற்கு அமைவாக 15ம் திகதியிலிருந்து ஒரு புகையிரத சேவையும், 31ம் திகதியிலிருந்து பிறிதொரு புகையிரத சேவையும் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்ததாகப் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் புதிய கட்டிடம் கையளிப்பு

( கரவெட்டி ஆ. நரேன் )

வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு – நெடுங்கேணி தண்டுவான் வெள்ளைப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலைக்குப் புதிதாக இரு பக்க கொட்டகைகள் ரூ. 950,000 பெறுமதியில் அமைக்கப்பட்டு அறநெறிப் பாடசாலை நிர்வாகத்திடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன.



அறநெறிப் பாடசாலை இணைப்பாளர் அ.சுகந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி, சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

இதில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜதீஸ், கிராம சேவையாளர் செல்வி.லினிசா மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கந்தளாயில் இரத்ததான நிகழ்வு

( கிண்ணியா ஷாபி )

'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் தொனிப் பொருளில், கந்தளாய் அல் தாரிக் தேசிய பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை (5) இரத்ததான நிகழ்வு நடைபெற்றது. கந்தளாய் மற்றும் திருகோணமலை வைத்தியசாலைகளில் இரத்த வங்கியில் நிலவும், இரத்த



தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு, இரத்ததான முகாம் நடத்தப்பட்டது. இதனை, கந்தளாய் அல்-புர்னி விளையாட்டுக் கழகம் மற்றும் புதிய மத்ரஸா நகர் சமூக சேவைகள் அபிவிருத்தி ஒன்றியம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

# அராலி வீதியில் உள்ள மதகில் பாரிய குழிகள்

( பு.கஜிந்தன் )

அராலி பாலத்திலிருந்து அராலி துறைக்குச் செல்லும் வீதியில் உள்ள மதகு ஒன்று பாரிய சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.



இந்த வீதியில் உள்ள மதகில் சுமார் இரண்டு அடி நீளமும் ஒன்றரை அடி அகலத்திலும் துவாரம் காணப்படுகின்றது. கொக்கிரீட்டிலான தகடு உடைந்து, அதற்குள்ளே இருந்த போக்கும் உடைந்தே இந்த குழி தோன்றியுள்ளது. இருப்பினும் கொங்கிரீட் தகட்டுக்குள்ளே கம்பிகள் காணப்படவில்லை என்ற விடயமானது முன்னர் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு பணிகளின் தரமற்ற தன்மையை எடுத்துக்காட்டுவதுடன் மக்கள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த வீதியால் அன்றாடம் 789 வழித்தட பயணிகள் சேவை பஸ்ஸில் பயணிப்பதுடன், வயோதிபர்கள், பாடசாலை மாணவர்கள், வேலைகளுக்குச் செல்வோர் எனப் பல்லாயிரக்கணக்கானோர் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

அத்துடன் எதிரே வருகின்ற ஒரு வாகனத்துக்கு இன்னொரு வாகனம் வழிவிட்டுப் பயணிப்பதற்கு ஏற்ற அளவில் இந்த வீதி காணப்படவில்லை. அகலத்தில் குறைந்ததாக உள்ளதுடன் இவ்வாறு குழியும் உள்ளதால் இந்த வீதியால் பயணிக்கும்போது ஆபத்தான பயணங்களையே எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.








பொகவந்தலாவை லிட்டில் ஏஞ்சல் முன்பள்ளியின் 15 வது ஆண்டு விழாவும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் அண்மையில் (05) பொகவந்தலாவை கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றன.

**படங்கள்: பொகவந்தலாவ நிருபர் எஸ் சதீஸ்**

# பாவனைக்கு உதவாத 12000 கிலோ தேயிலை தூள் கைப்பற்றல்

உடுநுவர, தவுலகல ஹந்தெஸ்ஸ தேயிலை களஞ்சியசாலையில் மனித பாவனைக்கு உதவாத 12000 கிலோ கிராம் தேயிலை தூள் பொதிகள் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கம்பளை முகாம் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. அனுமதியின்றி இரகசியமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்த கழிவு தேயிலை தூள் 426 பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்டிருந்தன.

கம்பளை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நளின் உதாரம்பவுக்கு கிடைத்த ரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த களஞ்சியசாலை சோதனை முற்றுகையிடப்பட்டுள்ளது. தவுலகல, வெலம்பொட, வடதெனிய ஹன்டெஸ்ஸ, லீமகஹகொடுவ,பூவலிகட உள்ளிட்ட உடுநுவர பிரதேசத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் பல வருடங்களாக இந்த கழிவு தேயிலை வியாபாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதனால் சிலோன் தேயிலையின் பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தொழிற்சாலைகளிலிருந்து அகற்றப்படும் கழிவு தேயிலையைக் கொண்டுவந்து சீனி, தேன், சாம்பல், சுண்ணாம்பு என பல்வேறு இரசாயனங்களைக் கலந்து கருப்பு தேயிலை தயாரித்து உள்நாடு மற்றும் வெளிநாட்டைச் சந்தைக்கு விற்கின்றனர் என்றார்.

# திறன் வகுப்பறை கட்டடம் திறப்பு

கிளிநொச்சி முரசுமோட்டையில் அமைந்துள்ள நவஜீவனம் பகல் பராமரிப்பு நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட திறன் வகுப்பறை கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது




இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் திருப்பேரவைத் தலைவர் அருட்பணி ஆர். அருன்புஸ்பராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கனடா நாட்டின் கோ போ சைல்ட் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் சிற்றப்பலம் குடும்பத்தினரின் கல்விப்பணியின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட குறித்த ஸ்மார்ட் வகுப்பறையானது திறந்து வைக்கப்பட்டது

இந்நிகழ்வில் மெதடிஸ்த திருச்சபையின் ஆயர் அருட்பணி கிங்சிலி வீரசிங்க மற்றும் வடக்கு- கிழக்கு மற்றும் மத்திய மாகாண அவை தலைவர்கள், கிளி முருகானந்தா ஆரம்ப வித்தியாலய அதிபர் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி அதிபர் மற்றும் பாடசாலை மாணவர்கள் அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்

சுண்ணக்கல் விவகாரம்;

# நீதிமன்றத்தால் வாகனம் கற்கள் விடுவிப்பு

( பு.கஜிந்தன் )

சாவக்கச்சேரியில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனால் வழிமறிக்கப்பட்ட சுண்ணக்கல் ஏற்றிய கனரக வாகனத்தை 5 இலட்சம் ரூபா பிணையில் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் விடுவித்தது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த வாரம் சாவகச்சேரி பகுதியில் இரவு வேலை கனரக வாகனத்தில் சுண்ணக்கல் ஏற்றிச் சென்ற வாகனத்தை இளங்குமரன் எம்.பி வழிமறித்திருந்தார்.

அச்சமயம் வாகன சாரதிக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் பொலிசாரின் தலையீட்டில் வாகனம் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில் நேற்று இச் சம்பவம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 5இலட்சம் ரூபா பிணையில் வாகனமும் கல்லும் விடுவிக்கப்பட்டன.




# இந்தியாவில் எச்எம்பிவி வைரஸ் பாதிப்பு 7 ஆக அதிகரிப்பு



இந்தியாவில் மெட்டப்நியூமோ வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்வடைந்துள்ளது. பெங்களூர், நாக்பூர், தமிழ்நாட்டில் இரண்டு குழந்தைகளுக்கும், குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் ஒருவருக்கும் எச்எம்பிவி பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

சீனாவில், இந்த தொற்றினால் அதிகமானோர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், நாட்டில் எச்எம்பிவி பாதிப்பு அதிகரித்து வருவது, கெரோனா போன்றதொரு நிலையை ஏற்படுத்தாது, எனவே மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார். எச்எம்பிவி வைரஸ் என்பது புதிய வைரஸ் ஒன்றும் இல்லை. இது 2001ஆம் ஆண்டே கண்டறியப்பட்டது தான் எனவும், உலகம் முழுவதும் பலரையும் இது பாதித்து வந்துள்ளதாக நட்டா தெரிவித்தார். பொதுவாகவே எச்எம்பிவி வைரஸ் பாதிப்புக்கு வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இருக்காது, உரிய நேரத்தில் கண்டறிந்துவிட்டால், தீவிரத்தன்மையைக் கட்டுப்படுத்திவிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய சுகாதாரத்துறையும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனமும், தேசிய நோய் கட்டுப்பாட்டு மையமும் இணைந்து, நாட்டில் நோய் பரவல் தன்மையை கண்காணித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மழை மற்றும் குளிர் காலங்களில் இன்புளுவென்சா, பாரா இன்புளுவென்சா, கரோனா, ரெஸ்பிரேட்டரி சிண்ஸ்டியல் வைரஸ் எனப்படும் சுவாசத் தொற்று நோய், அடினோ வைரஸ், ரைனோ வைரஸ் பரவுவது வழக்கமான நிகழ்வு. அதனுடன் சேர்த்து, அதைவிட வீரியம் குறைந்த ஹியூமன் மெட்டப்நியூமோ வைரஸ் என்ற எச்எம்பிவி வைரஸ் தொற்றும் பல காலமாக சமூகத்தில் பரவி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சளி, காய்ச்சல், இருமல், சுவாச பாதிப்பு ஆகியவை அதன் முக்கிய அறிகுறிகள். அதனால் பாதிக்கப்பட்டவர்களில் 90 சதவீதம் பேருக்கு தானாகவே அந்தப் பிரச்சனை சரியாகிவிடும். ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள், எதிர்ப்பாற்றல் குறைந்தவர்கள், முதியவர்கள் மட்டும் அந்தப் பாதிப்புக்கு உரிய சிகிச்சை பெற வேண்டியது அவசியம் என சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதுச்சேரியில் சர்வதேச யோகா போட்டி 1,208 பேர் பங்கேற்பு



புதுச்சேரி அரசு சுற்றுலாத்துறை சார்பில், 30ஆவது சர்வதேச யோகா திருவிழா புதுச்சேரி கடற்கரை வீதி பழைய துறைமுக வளாகத்தில் நடைபெற்றது. விழாவையொட்டி நடந்த யோகா போட்டிகளில் புதுச்சேரி, ஆந்திரா, டில்லி, குஜராத், அரியானா, கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா, தமிழ்நாடு, தெலுங்கானா, உத்தரபிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் உட்பட அனைத்து மாநிலங்களில் இருந்தும் 1,208 பேர், இருபாலர் பிரிவிலும் பல்வேறு போட்டிகளில் பங்கேற்றனர். தொடர்ந்து யோகா நித்ரா பயிற்சி, போட்டிகள், பயிலரங்கங்கள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நேற்று காலை புதுவை கடற்கரை வீதியில் யோகா செயல் விளக்கம் மற்றும் மூச்சு பயிற்சி விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. குழந்தைகளுக்கான யோகா, இறுதிப் போட்டி மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் யோகா திருவிழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கேரளாவில் மண்டையோடு, எலும்புகள் மீட்பு



கேரளத்தில் 25 ஆண்டுகளாக பூட்டி வைக்கப்பட்டிருந்த வீட்டில் மனித மண்டையோடு மற்றும் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கொச்சி மாவட்டம், சோட்டானிக்கரை அருகேவுள்ள எருவேலி பகுதியில் கடந்த 25 ஆண்டுகளாக பராமரிப்பு இன்றி பூட்டி வைக்கப்பட்டிருந்த 14 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டடுக்கு வீடு அமைந்துள்ளது. அந்த இடத்தில் சமூக விரோத செயல்கள் நடப்பதாக கிராமத் தலைவர் அளித்த புகாரினைத் தொடர்ந்து, சோட்டானிக்கரை பொலிஸார் திங்கட்கிழமை பரிசோதனை மேற்கொண்டனர். அங்குள்ள வீட்டில் நடத்தப்பட்ட பரிசோதனையில் பழுதடைந்த பழைய குளிர்சாதனப் பெட்டியில் மூன்று பிளாஸ்டிக் பையில் மனித மண்டையோடு, எலும்புகள் இருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மண்டையோடு மற்றும் எலும்புகளை கைப்பற்றி தடயவியல் பரிசோதனைக்காக பொலிஸார் அனுப்பியுள்ளனர். அந்த சோதனைக்கு பிறகே எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு கொல்லப்பட்ட உடலின் பாகங்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கொச்சி மாவட்டம் வைட்டிலா பகுதியில் வசிக்கும் வைத்தியர் பிலிப் ஜோன் (வயது 74) என்பவருக்கு சொந்தமான வீடு என்று விசாரணையில் தெரிய வந்ததையடுத்து இதுகுறித்த விசாரணைக்காக பிலிப் ஜோனுக்கு பொலிஸார் தகவல் அனுப்பியுள்ளனர்.

வெளிநாட்டில் உள்ள பிலிப் ஜோனின் மகன்களுக்கும் தகவல் அளிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக சோட்டானிக்கரை பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், மூடநம்பிக்கை காரணமாக நடத்தப்பட்ட கொலையா என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 'தமிழகம் அமைதியாக இருக்காது' முதலமைச்சர் ஸ்டாலின்



"கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி பறிக்கப்படும்போது தமிழகம் அமைதியாக இருக்காது" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

துணைவேந்தர் நியமனத்திற்கான தேடுதல் குழுவை அமைப்பதில் கவர்னருக்கு அதிக அதிகாரம் அளிக்கும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு UGC, விதிமுறைகளை கொண்டு வந்துள்ளது. இது தொடர்பான வரைபு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முதலமைச்சர் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில் துணைவேந்தர் நியமனத்தில் கவர்னருக்கு அதிக அதிகாரம் அளிக்கும் வகையிலும், கல்வித் துறையை சாராதவர்கள் துணை வேந்தர்களாக நியமிக்கும் வகையிலும் UGC கொண்டு வந்துள்ள விதிமுறைகள், மாநில உரிமைகள் மற்றும் கூட்டாட்சி மீதான நேரடி தாக்குதல். மத்திய பா.ஜ.க அரசின் இந்த நடவடிக்கையானது, அதிகாரங்களை ஒரே இடத்தில் குவிக்கவும், ஜனநாயக ரீதியில் தேர்வு செய்யப்பட்ட அரசின் அதிகாரங்களை குறைக்கவும் வழிவகுக்கும். கல்வியானது, மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசாங்கத்தின் கைகளில் இருக்க வேண்டுமேயன்றி, பா.ஜ.க அரசின் விருப்பத்திற்கு ஏற்ப செயல்படும் கவர்னரின் கட்டளைக்கு ஏற்ப இருக்கக்கூடாது. கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி பறிக்கப்படும்போது, அதிக உயர் கல்வி நிறுவனங்களினைக் கொண்ட மாநிலங்களில் முன்னணியில் இருக்கும் தமிழகம் அமைதியாக இருக்காது. கல்வி என்பது நமது அரசியலமைப்பில் ஒருங்கிணைந்த பட்டியலில் இருக்கும் பிரிவு. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இந்த நடவடிக்கை ஒரு தலைப்பட்சமானது. இந்த அத்துமீறலை ஏற்க முடியாது. சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தமிழகம் போராடும் என முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்தார்.

## கர்நாடகா விபத்தில் மூவர் பலி

கர்நாடகாவில் மோட்டார் சைக்கிள் மீது உழவு இயந்திரம் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

கர்நாடக மாநிலம் தும்கூரில் உள்ள ஓபலாபூர் கேட் அருகே சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது உழவு இயந்திரம் மோதியதில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்த சம்பவம் நேற்று அதிகாலை நடத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்த தகலறிந்து வந்த பொலிஸார் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அருகில் இருந்த வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இந்த சம்பவம் குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 'இன்டர்போல்' போன்று இந்தியாவில் 'பாரத்போல்' உருவாக்கம்



'இன்டர்போல்' எனப்படும் சர்வதேச குற்ற விசாரணை அமை ப்பை போன்று இந்தியாவில் 'பாரத் போல்' அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார்.

டில்லியில் மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) உருவாக்கியுள்ள பாரத்போல் இணையத்தளத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆரம்பித்து வைத்தார். இந்தியாவில் சர்வதேச காவல் துறையின் தேசிய பணியகமாக உள்ள சிபிஐ அமைப்பானது சட்ட அமுலாக்க ஏஜென்சிகள் உட்பட நாடு முழுவதும் உள்ள பல்வேறு புலனாய்வு ஏஜென்சிகளுடன் இணைந்து குற்றவியல் தொடர்பான விடயங்களில் சர்வதேச புலனாய்வு அமைப்புடன் ஒத்துழைக்க இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா 'இன்டர்போல்' எனப்படும் சர்வதேச குற்ற விசாரணை அமைப்பை போன்று இந்தியாவில் 'பாரத்போல்' அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. சி.பி.ஐ அமைப்பின் கீழ் செயல்படும் இவ் அமைப்பு சர்வதேச விசாரணை அமைப்புகளுக்கு உதவுதுடன் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லும் குற்றவாளிகளை பிடிக்கவும் உதவி செய்யும். சர்வதேச பொலிஸ் உதவியை விரைவாக அணுக முடியும். சி.பி.ஐ ஆல் உருவாக்கப்பட்ட பாரத்போல் போர்டல், நமது விசாரணை நிறுவனங்களின் உலகளாவிய அணுகலை மேம்படுத்தும், அனைவருக்கும் பாதுகாப்பான பாரதம் என்ற அரசாங்கத்தின் பார்வையை நிறைவேற்றும்.

## தங்கம் வாங்கிய நாடுகள் பட்டியலில் இந்தியா 2ஆம் இடம்




2024ஆம் ஆண்டில் உலகளவில் தங்கம் அதிகளவில் வாங்கிய நாடுகள் பட்டியலில் இந்தியா 2ஆம் இடத்தில் உள்ளது என உலக தங்க நிறுவனம் தெரிவித்துள்ளது. கடந்தாண்டு இந்திய ரிசர்வ் வங்கி 73 தொன் தங்கத்தை வாங்கியதாகவும் இதன் மூலம் அந்நாட்டு வசம் உள்ள தங்கத்தின் கையிருப்பு 876 தொன்னாக உயர்ந்துள்ளதாகவும் உலக தங்க கவுன்சில் தெரிவித்துள்ளது. தங்கம் அதிகம் வாங்கிய நாடுகள் பட்டியலில் போலந்து முதலிடத்தில் உள்ளதாகவும் இந்நாடு 90 தொன் தங்கம் வாங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்கம் அதிகம் வாங்கிய நாடுகள் பட்டியலில் உஸ்பெகிஸ்தான், கசகஸ்தான், சீனா, ஜோர்தான், துருக்கி ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிலக்கரி சுரங்கத்தில் மூவர் உயிரிழப்பு



வடகிழக்கு மாநிலமான அசாமில் வெள்ளம் சூழ்ந்த நிலக்கரிச் சுரங்கத்தில் சிக்கியுள்ள சுரங்கத் தொழிலாளர்களை மீட்கும் பணியில் இந்திய மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். சுரங்கத்தில் சிக்கிக் கொண்ட ஒன்பது தொழிலாளர்களில் மூவர் உயிரிழந்துவிட்டதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அசாமின் திமா ஹசாவ் மாவட்டத்தில், பெயர் பெற்ற பகுதியான உம்ராங்சோ பகுதியில் 'எலி வளை' நிலக்கரி சுரங்கத்தில் திடீர் வெள்ளம் புகுந்ததால் திங்கட்கிழமையன்று (06) இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. சுரங்கத்தில் சிக்கியுள்ள ஆறு தொழிலாளர்களை மீட்கும் பணிகளை இராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF) மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை (SDRF) உள்ளிட்ட பல அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன.

2014 முதல் இந்தியாவில் இதுபோன்ற சுரங்கங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தாலும், அசாம் மற்றும் பிற வடகிழக்கு மாநிலங்களில் சிறிய சட்டவிரோத சுரங்க அகழ்வுச் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவின் வடகிழக்கில் சுரங்கம் தொடர்பான பேரழிவுகள் அசாதாரணமானது அல்ல.

2018 டிசம்பரில் மேகாலயாவில் உள்ள ஒரு சட்டவிரோத சுரங்கத்துக்குள் ஆற்றுத் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதால் குறைந்தது 15 பேர் அதில் சிக்கிக் கொண்டனர். அவர்களில் ஐந்து சுரங்கத் தொழிலாளர்கள் தப்பிக்க முடிந்தது, ஆனால் மற்றவர்களுக்கான மீட்பு பணிகள் 2019 மார்ச் முதல் வாரம் வரை நீடித்த நிலையில் இரண்டு உடல்கள் மாத்திரம் மீட்கப்பட்டிருந்தன.2024 ஜனவரியில் நாகாலாந்து மாநிலத்தில் எலிவளை நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 தொழிலாளர்கள் உயிரிழந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நேபாளம் மேற்கில் பாரிய நிலநடுக்கம்

# திபெத், நேபாளத்தில் 223 க்கு மேல் பலி

உலக வலம்

பா. கிருஷிகா

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் குறைந்தது 128 பேர் உயிரிழந்ததுடன் 100 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

சுமார் 190,000 மக்கள் வசிக்கும் தலைநகரான காத்மண்டுவிற்கு மேற்கே 500 கிலோமீட்டர் (310 மைல்) தொலைவில் உள்ள மலைப்பாங்கான மாவட்டமான ஜாஜர்கோட்டின் மேற்குப் பகுதியைச் சுற்றி வெள்ளிக்கிழமை இரவு 11:47 மணிக்கு ஆழமற்ற நிலநடுக்கம் ஏற்பட்டது. அமெரிக்க புவியியல் ஆய்வு ரிக்டர் அளவுகோலில் 5.6 ஆக பதியப்பட்டதுடன் அது வெறும் 18 கிமீ (11 மைல்) ஆழத்தில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இந்த அதிர்வுகள் காத்மண்டு தொடக்கம் இந்திய தலைநகர் புதுடில்லி வரை சுமார் 600 கிமீ (375 மைல்கள்) தொலைவிலும் உணரப்பட்டன. “இறந்தவர்களின் எண்ணிக்கை 119 ஐ எட்டியுள்ளதுடன் குறைந்தது 100 பேர் காயமடைந்துள்ளனர்” என கர்னாலி மாகாண காவல்துறை செய்தித் தொடர்பாளர் கோபால் சந்திர பட்டாரை மேற்கோள் காட்டி AFP செய்தி நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது.

அத்துடன் சீன எல்லையின் மலைப்பகுதியான திபெத்தில் செவ்வாய்க்கிழமை (07) காலை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தினால் குறைந்தது 95 பேர் உயிரிழந்துள்ளதுடன், 130 பேர் காயமடைந்துள்ளதாக சீன அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

பீஜிங் நேரப்படி 09:05 மணியளவில் திபெத்தின் புனித ஷிகாட்சே (Shigatse) நகரத்தை 7.1 மெக்னிடியூட் அளவில் தாக்கிய இந்த நிலநடுக்கமானது அயல் நாடான நேபாளம், பூட்டான் மற்றும் வட இந்தியாவின் சில பகுதிகளில் இமயமலை முழுவதும் உணரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நிலநடுக்கம் 10 கிலோ மீட்டர் (ஆறு மைல்) ஆழத்தில் இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்தது. அனர்த்தத்தை அடுத்து திபெத்தின் பல பகுதிகளுக்கான மின்சாரம் மற்றும் குடிநீர் விநியோகம் இரண்டும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், உயிரிழப்புகளைக் குறைப்பதற்கும், பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களை மீள்குடியேற்றுவதற்கும் முழுமையான தேடல் மற்றும் மீட்பு முயற்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு 3,400 இற்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் மற்றும் 340 இற்கும் மேற்பட்ட மருத்துவ பணியாளர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக சீன ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





இந்திய மற்றும் யூரேசிய டெக்டோனிக் தகடுகளின் பெரிய கோட்டிற்கு அருகில் அமைந்துள்ள இப்பகுதி, அடிக்கடி நில அதிர்வு நடவடிக்கைகளுக்கு தாயகமாக உள்ளது. 2015 ஆம் ஆண்டில், நேபாளத்தின் தலைநகரான காத்மண்டு அருகே ஏற்பட்ட 7.8 மெக்னிடியூட் அளவிலான நிலநடுக்கத்தில் சுமார் 9,000 பேர் உயிரிழந்தனர் மற்றும் 20,000 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவில் இலவச உணவு திட்டம்



இந்தோனேசியாவில் பள்ளிக்குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து குறைபாட்டால் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்குறைபாட்டை போக்க அந்நாட்டு அரசு முன்னெடுத்துள்ள இத்திட்டத்தில் சோறு, காய்கறிகள், பழங்கள், இறைச்சி ஆகியவை வழங்கப்படுகின்றன.

இந்தோனேசியா ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோவின் பல திட்டங்களில் ஒன்று இலவச உணவுத் திட்டம். இத்திட்டமே கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பிரபோவோவின் தேர்தல் பிரசாரத்தின் மையமாக இருந்தது. விழா எதுவுமின்றி சாதாரணமாக திங்கட்கிழமை இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் 190 சமையல் அறைகளில் 20 இற்கும் மேற்பட்ட பாடசாலை சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு உணவு தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஆரம்ப நாளில் மட்டும் 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் உணவருந்தினர். இத்திட்டம் முழு வீச்சில் செயற்படுத்தப்படும் போது 2029 ஆம் ஆண்டில் நாட்டின் 280 மில்லியன் மக்கள்தொகையில் 82.9 மில்லியனை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பிறிக்ஸ் அமைப்பில் இணைந்தது இந்தோனேசியா

பிறிக்ஸ் அமைப்பின் உறுப்பினராக இந்தோனேசியா இணைந்ததாக பிரேசில் அறிவித்து இருக்கிறது. தெற்கு ஆசியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தோனேசியா காணப்படுகிறது.

இது தொடர்பாக பிரேசில் வெளியுறவு துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், “தென்கிழக்கு ஆசியாவின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடு உலகளாவிய நிர்வாகத்தின் நிறுவனங்களை சீர்திருத்தும் விருப்பத்தை மற்ற உறுப்பு நாடுகளுடன் பகிர்ந்து கொள்கிறது. மேலும், உலகளாவிய தெற்கிற்குள் ஒத்துழைப்பை வழங்கவும் சாதகமாக பங்களிக்கிறது” என தெரிவிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு பிறிக்ஸ் அமைப்பின் தலைமையை ஏற்றுள்ள பிரேசில், இந்தோனேசியாவை அமைப்பில் இணைப்பது தொடர்பான முயற்சிகளை கடந்த 2023 ஆம் ஆண்டு ஆரம்பித்ததாக தெரிவித்தது. 2009 ஆம் ஆண்டு பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளால் பிறிக்ஸ் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதற்கு அடுத்த ஆண்டு பிறிக்ஸ் அமைப்பில் தென் ஆபிரிக்கா இணைக்கப்பட்டது. கடந்த ஆண்டு, பிறிக்ஸ் அமைப்பில் ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் முழு உறுப்பினர்களாக இணைந்தன.



# பூமியின் தென் துருவத்தை அடைந்த அமீரக நிபுணர்கள்



அமீரக தேசிய வானிலை மையத்தில் பணியாற்றும் அகமது அல் காபி மற்றும் பதர் அல் அமெரி ஆகிய 2 நிபுணர்கள் பூமியின் தென் துருவத்தை வெற்றிகரமாக அடைந்து தங்கள் பயணத்தை நிறைவு செய்துள்ளனர்.

தென் துருவத்தில் தகவமைப்புக்களுடன் கூடிய விலங்குகள் மற்றும் தாவரங்கள் மட்டுமே வாழ முடியும். அந்தாட்டிக்கா கண்டத்தினை மட்டுமே ஆய்வு செய்ய வேண்டும் என கடந்த 1959ஆம் ஆண்டு 12 நாடுகள் இரு உடன்படிக்கையை ஏற்படுத்தின. இதில் தற்போது 49 நாடுகள் இணைந்துள்ளன. இந்த பகுதியில் 28 நாடுகள் ஆங்காங்கே ஆராய்ச்சி நிலையங்களை அமைத்துள்ளன. கண்டத்தின் நில பகுதிகளை 7 நாடுகள் சொந்தம் கொண்டாடுகின்றன. கோடை காலம் நிலவும் போது மொத்தம் 5 ஆயிரம் ஆராய்ச்சியாளர்கள் வந்து தங்கி இருப்பர். தற்போது அமீரக தேசிய வானிலை மையம், பல்கேரியாவின் துருவ ஆராய்ச்சி பயிற்சி மையத்துடன் இணைந்து கூட்டு அறிவியல் பயணத்திற்கு ஏற்பாடு செய்தது.

இதில் அமீரக தேசிய வானிலை மையத்தில் பணியாற்றும் அகமது அல் காபி மற்றும் பதர் அல் அமெரி ஆகிய 2 நிபுணர்கள் பூமியின் தென் துருவத்தை வெற்றிகரமாக அடைந்து தங்கள் பயணத்தை நிறைவு செய்துள்ளனர். இதற்காக இருவருக்கும் தீவிர பயிற்சி வழங்கப்பட்டது. தொடர்ந்து வெற்றிகரமாக இருவரும் பூமியின் தென் துருவத்தை வெற்றிகரமாக அடைந்துள்ளனர். இந்த நிபுணர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளில் 2 வானிலை மற்றும் நிலநடுக்க கண்காணிப்பு மையங்கள் அமீரகம் சார்பில் நிறுவப்படவுள்ளது. இதன் மூலம் துருவப்பகுதியில் வானிலை மாற்றங்கள் மற்றும் நிலநடுக்க செயற்பாடுகள் குறித்த தரவுகள் சேகரிக்கப்படும்.

# அமெரிக்காவில் பனிப்புயலில் சிக்கி ஐவர் உயிரிழப்பு

அமெரிக்காவை தாக்கிய பெரும் குளிர்கால புயலால் குறைந்தது ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். பனிப் புயலானது நாட்டின் வெகுஜன பாடசாலைகள் மூடல், பயணக் குழப்பம் மற்றும் மின் வெட்டு போன்றவற்றிற்கும் வழிவகுத்தது.

அதேநேரம் மேரிலாந்து, வேர்ஜினியா, மேற்கு வேர்ஜினியா, கன்சாஸ், மிசோரி, கென்டக்கி மற்றும் ஆர்கன்சாஸ் ஆகிய ஏழு அமெரிக்க மாநிலங்களில் அவசரநிலைகளை அறிவிக்கப்பட்டுள்ளன. தீவிர வானிலை காரணமாக 2,300 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டதுடன், 9,000 விமானங்கள் தாமதமாகியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Poweroutage.us. தகவலின்படி, புயலின் பாதையில் உள்ள மாநிலங்களில் திங்கட்கிழமை (06) இரவு 200,000 இற்கும் மேற்பட்ட மக்கள் மின்சாரம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே செவ்வாய்க்கிழமையன்று (07) அமெரிக்காவின் வடகிழக்கு பகுதிகளில் பனி மற்றும் பனிப்பொழிவு தொடரும் என்று நாட்டின் தேசிய வானிலை சேவை (NWS) கணித்துள்ளது.



# சீன தொழில்நுட்ப நிறுவனங்கள் இராணுவ தொடர்பு பட்டியலில் இணைப்பு

கேமிங் மற்றும் சமூக ஊடக நிறுவனமான டென்சென்ட் ஹோல்டிங்ஸ் மற்றும் மின்கல தயாரிப்பாளரான CATL உட்பட பல சீன தொழில்நுட்ப நிறுவனங்களை அமெரிக்கா, சீனாவின் இராணுவத்துடன் இணைந்து செயல்படும் வணிகங்களின் பட்டியலில் இணைத்துள்ளது.

திங்கட்கிழமையன்று (06) வெளியிடப்பட்ட ஆவணத்தின்படி, இந்த பட்டியலில் சிப் தயாரிப்பாளரான சாங்சின் மெமரி டெக்னாலஜிஸ், குவெக்டெல் வயர்லெஸ் மற்றும் ட்ரோன் தயாரிப்பாளரான ஆடெல் ரோபாட்டிக்ஸ் ஆகியவையும் உள்ளடங்குகின்றன. சீன நிறுவனங்களுடன் வணிகம் செய்வதால் ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து அமெரிக்க நிறுவனங்களுக்கு இந்த பட்டியல் ஒரு எச்சரிக்கையாக அமைகின்றது. பட்டியலுக்கான புதிய இணைப்பானது குறித்த நிறுவனங்களுக்கு உடனடியாகத் தடையை ஏற்படுத்தாது என்றாலும், அவற்றுக்கு அனுமதியளிக்க அமெரிக்க திறைசேரி துறைக்கு அழுத்தம் கொடுக்கும். டென்சென்ட் மற்றும் CATL ஆகியவை சீன இராணுவத்துடன் தொடர்பு எதையும் பேணவில்லை என்று மறுத்துள்ளன. அதே நேரத்தில், இந்த முடிவானது சீன நிறுவனங்களை நியாயமற்ற முறையில் அடக்குவதாக பீஜிங் தெரிவித்துள்ளது.




பொருளாதார நாடுகளுக்கிடையேயான உறவுகள் மிகவும் மோசமாக உள்ள நிலையில் இந்த செய்தி வெளிவந்துள்ளது.






# டெஸ்ட் தொடரை வென்ற தென்னாபிரிக்கா

## தொடர் நாயகன்-மார்கோ யான்சென்
## ஆட்ட நாயகன்-ரியான் ரிக்கல்டான்

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தென்னாபிரிக்க அணி டெஸ்ட் தொடரை முழுமையாகக் வென்றுள்ளது.

தென்னாபிரிக்க மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கேப் டவுனில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதல் இன்னிங்ஸில் விளையாடிய தென்னாபிரிக்க அணி 615 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. தென்னாபிரிக்க அணியில் அதிகபட்சமாக ரியான் ரிக்கல்டான் 239 ஓட்டங்கள் எடுத்தார். அவரைத் தொடர்ந்து, கப்டன் டெம்பா பவுமா 106 ஓட்டங்கள், கைல் வெரைன் 100 ஓட்டங்கள் குவித்தனர்.



பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 194 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க ஃபாலோ ஆன் ஆனது. பாகிஸ்தான் அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 478 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. கப்டன் ஷான் மசூத் அதிகபட்சமாக 145 ஓட்டங்கள் எடுத்தார். அவரைத் தொடர்ந்து, பாபர் அசாம் 81 ஓட்டங்களும், சல்மான் அகா 48 ஓட்டங்களும் எடுத்தனர்.

தென்னாபிரிக்க சார்பில் ககிசோ ரபாடா மற்றும் கேசவ் மகாராஜ் தலா 3 விக்கெட்டுகளைக் வீழ்த்தினர். மார்கோ யான்சென் 2 விக்கெட்டுகளைக் வீழ்த்தினார்.

இதனையடுத்து, தென்னாபிரிக்க அணிக்கு 58 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

58 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய தென்னாப்பிரிக்க அணி 7.1 ஓவர்களில் பாகிஸ்தானை 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. டேவிட் பெடிங்ஹம் 30 பந்துகளில் 47 ஓட்டங்கள், அய்டன் மார்க்ரம் 13 பந்துகளில் 14 ஓட்டங்கள் களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாப்பிரிக்க அணி 2-0 என முழுமையாகக் கைப்பற்றியது. ரியான் ரிக்கல்டான் ஆட்ட நாயகனாகவும், மார்கோ யான்சென் தொடர் நாயகனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



# தோல்வியடையாத டெஸ்ட் கப்டன்

பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக 7ஆவது வெற்றியைப் பெற்றுள்ளது. மேலும் டெம்பா பவுமா தலைமையிலான தென்னாபிரிக்க அணி இதுவரை டெஸ்ட்டில் தோல்வி பெறாத அணியாகத் திகழ்கிறது. அவரது கப்டனில் தென்னாபிரிக்க அணி 9 டெஸ்ட்டில் விளையாடி 8இல் வெற்றியும் ஒரு போட்டி சமநிலையிலும் முடிந்துள்ளது.

இதன்மூலம் டெஸ்ட்டில் முதல் தோல்விக்கு முன் அதிக வெற்றிகளைப் பதிவு செய்த தென்னாபிரிக்க கப்டன் என்ற மாபெரும் சாதனையை பவுமா படைத்துள்ளார். இந்த பட்டியலில் ஹசிம் அம்லா 2ஆவது இடத்தில் உள்ளார். இவர் முதல் 8 டெஸ்ட் போட்டிகளில் ஒரு தோல்வியும் அடைந்ததில்லை. இந்த சாதனையை பவுமா (9 போட்டிகள்) முறியடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய மாற்றத்துக்குள்ளாகும் தெற்காசிய உதைப்பந்தாட்ட சம்பியன்சிப்



தெற்காசிய உதைப்பந்தாட்ட சம்பியன்சிப் போட்டித் தொடரை புதிய மாற்றத்துடன் நடத்துவதற்கு தெற்காசிய உதைப்பந்தாட்ட சம்மேளனம் முயற்சிக்கிறது. இதுவரை, தெற்காசிய கால்பந்து சம்பியன் ஷிப் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஒரு நாட்டின் மையத்தில் நடத்தப்பட்டது, ஆனால் புதிய ஆண்டுக்கான புதிய மாற்றத்தில் தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் போட்டிகளை வழங்கும் மற்றும் ஏழு அணிகள் லீக் முறையில் விளையாடும்.

தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தின் செயற்குழு கூட்டம் நேபாளத்தில் உள்ள காத்மாண்டுவில் இன்று கூடுகிறது, அங்கு இந்த புதிய முறை குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

இருப்பினும் இந்த ஆண்டுக்கான தெற்காசியக் கால்பந்து சம்பியன்ஷிப் போட்டியை ஜுன்-ஜுலை மாதங்களில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தெற்காசிய உதைப்பந்தாட்ட போட்டியை புதிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வந்தாலும், இம்முறை அது நடைமுறைப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அதன்படி, இந்த ஆண்டு முதல் தெற்காசிய உதைப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் புதிய முறையில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு அணியும் ஆறு போட்டிகளில் விளையாட வேண்டும், இதில் ஒரு அணி மூன்று போட்டிகளை தங்கள் சொந்த நாட்டிலும் மற்ற மூன்று போட்டிகள் எதிரணியின் நாட்டிலும் விளையாட வேண்டும். ஒரே நாளில் மூன்று நாடுகள் இணைந்து விளையாடும் போட்டிகள் ஒரே நேரத்தில் தொடங்கும். சொந்த நாட்டில் கால்பந்து போட்டியை விளையாடிய பிறகு, அடுத்த போட்டிக்கு விமானம் உட்பட மற்ற ஓய்வு தேவைகளுக்கு ஐந்து நாட்கள் ஓய்வு அனுமதிக்கப்படுகிறது.

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் கூறுகையில்,

இந்த புதிய முறை ஒவ்வொரு நாட்டிலும் உள்ள உதைப்பந்தாட்ட ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் இப்பிராந்தியத்தில் உதைப்பந்தாட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்படும் என்பதால் இலங்கை இதற்குப் பூரண ஆதரவை வழங்கும் எனத் தெரிவித்தார்.

சிங்கப்பூரைச் சேர்ந்த அமெரிக்க நிறுவனம் ஒன்று தெற்காசிய உதைப்பந்தாட்ட சாம்பியன்ஷிப்பிற்காக அனுசரணை வழங்கியுள்ளது, மேலும் அவர்களின் உள்ளீட்டைக் கருத்தில் கொண்டு புதிய முறை வடிவமைக்கப்பட்டுள்ளது.




நிந்தவூர் பிரதேச சபையின் வழிகாட்டலின் கீழ் இயங்கி வரும் அல் ஹிக்மா முன் பள்ளி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழாவில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளினால் நினைவுச் சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படம் : திகாமடுல்ல நிருபர்)

# இங்கிலாந்து-ஆப்கானிஸ்தான் அணிகள் விளையாடத் தடை

சம்பியன்ஸ் கிண்ணத்தில் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து அணி விளையாடக்கூடாது என 160-க்கும் அதிகமான இங்கிலாந்து அரசியல்வாதிகள் வலியுறுத்தி உள்ளனர்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் பிப்ரவரி 19ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் 9ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இந்தத் தொடர் பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடைபெறுகிறது. இந்தியாவுக்கான போட்டிகள் மட்டும் துபாயில் நடக்கும் என ஐசிசி தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் பெண்கள் உரிமைகள் மீதான தலிபான் ஆட்சியின் தாக்குதலுக்கு எதிராக இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் கிளப் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும், பெப்ரவரி 26 ஆம் திகதி பாகிஸ்தானின் லாகூரில் நடைபெறவுள்ள ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் அரசியல்வாதிகள் விரும்புகிறார்கள்.







2021ஆம் ஆண்டில் தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததிலிருந்து விளையாட்டில் பெண்கள் பங்கேற்பது தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பணமில்லாத தேசிய விளையாட்டு நிதியம்




விளையாட்டு அமைச்சின் செலவினங்களுக்காக முக்கியமாகப் பயன்படுத்தப்படும் தேசிய விளையாட்டு நிதியம் இன்னும் பூஜ்ஜியத்தில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த நிதியத்தில் உள்ள அனைத்துப்பணமும் செலவழிக்கப்பட்டு, பங்களிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் நடைபெற்ற பெரிஸ் பரா ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற இலங்கையின் சமித துலான் கொடிதுவக்கும் அவரது பயிற்சியாளருக்கும் பரிசுத் தொகை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிகள் மற்றும் பதக்கங்களை வெல்லும் இலங்கை விளையாட்டு வீரர்களுக்குப் பரிசுத் தொகை மற்றும் உதவி வழங்கத் தேசிய விளையாட்டு நிதியம் பயன்படுத்தப்படுகிறது.

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய விளையாட்டு மற்றும் ஆசிய பரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற இலங்கை வீரர்களுக்கு விளையாட்டு அமைச்சினால் கடந்த ஆண்டு ஜுலை மாதம் தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து ஆறு கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை வழங்கியது. அதன் பின்னரே நிதியம் பூஜ்ஜிய நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிதியம் அனுசரணை வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்புடன் பராமரிக்கப்பட்டு வந்துள்ள. தேசிய லொத்தர் சபை மற்றும் இலங்கை கிரிக்கெட் ஆகியவை முன்னணி அனுசரணை வழங்கும் நிறுவனங்களாகும் .

விளையாட்டு அமைச்சு கடந்த சில வருடங்களாக எதிர்கொண்ட நிதி நெருக்கடியின் போது தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து விசேட பங்களிப்பைப் பெற்றுள்ளது. இலங்கை பங்குபற்றிய பல சர்வதேச சுற்றுப்பயணங்களின் செலவுகளுக்காகவும் தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து பணம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியம் விளையாட்டு அமைச்சின் செயலாளரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து, தேசிய விளையாட்டு நிதியம் காலியாக இருப்பதாகவும், அதிலிருந்து அனுசரணை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் திட்டமிடப்பட்ட பல விளையாட்டு நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 08ம் திகதி புதன்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.